ISBN:978-81-687049-9-2

108

செந்தமிழறிஞர்கள்

அப்துல் ரகுமான்





பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

https://www.annacentenarylibrary.org/pages/view/155-%E0%AE%85%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%81%E0%AE%B2%E0%AF%8D-%E0%AE%B0%E0%AE%95%E0%AF%81%E0%AE%AE%E0%AE%BE%E0%AE%A9%E0%AF%8D-1937

செந்தமிழ்சிற்பிகள்

அப்துல் ரகுமான் (1937 - 2017)



அறிமுகம்

அப்துல் ரகுமான், தமிழ்நாட்டைச் சேர்ந்த கவிஞரும், தமிழ்ப் பேராசிரியரும் ஆவார். கவிக்கோ என்று சிறப்பாகக் குறிப்பிடப்படுகிறார். 'வானம்பாடி' இயக்கக் கவிஞர்களோடு இணைந்தியங்கியவர். அவர் பால்வீதி என்ற கவிதைத் தொகுதி மூலம் தம்மை ஒரு சோதனைப் படைப்பாளியாக இனங்காட்டிக் கொண்டார். அத்தொகுதி வெளிவந்த போது கவிதையை நேரடியாகத் தராமல் உவமைகள், உருவகங்கள், படிமங்கள், குறியீடுகள் ஆகியவற்றின் வழி வெளியீட்டு முறையை அமைத்துக் கொண்டார். தமிழில் கவிதைக் குறியீடுகள் குறிந்து ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்றவர். தமிழில் ஹைக்கூ, கஜல் ஆகிய பிறமொழி இலக்கியங்களை முனைந்ததிலும் பரப்பியதிலும் இவர் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

1960 க்கு பின் கவிதை உலகுக்கு வந்த இவர் கவியரங்கக் கவிதைகளாலும் சிறப்படைந்துள்ளார். சிலேடை வார்த்தைகளால் கேட்போரைக் கவர்வது இவரது பாணி. வாணியம்பாடி இஸ்லாமியக்

கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணி புரிந்தவர். ஆலாபனை கவிதைத் தொகுப்புக்காக சாகித்ய அகாடமி விருது பெற்றவர்.

பிறப்பு

அப்துல் ரகுமான் மதுரையில் வைகை ஆற்றின் தென்கரையில் 1937 நவம்பர் 2 ஆம் நாள் உருதுக் கவிஞர் மஹி என்னும் சையத் அஹமத் – ஜைனத் பேகம் இணையருக்கு மகனாகப் பிறந்தார்.

கல்வி

அப்துல் ரகுமான் தனது தொடக்கக் கல்வியையும் உயர்நிலைப் பள்ளிக் கல்வியையும் மதுரையில் உள்ள பள்ளிகளில் பெற்றார். பின்னர் மதுரை தியாகராசர் கல்லூரியில் சேர்ந்து இடைநிலை வகுப்பில் தேறினார். தொடர்ந்து அக்கல்லூரியிலேயே பயின்று இளங்கலை, முதுகலை பட்டங்களைப் பெற்றார்.

பணி

தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றதும் வாணியம்பாடி இசுலாமியா கல்லூரியில் பணியாற்ற அவருக்கு 1961 ஆம் ஆண்டில் வாய்ப்புக் கிடைத்து. அங்கே சிற்றுரையாளர், விரிவுரையாளர், பேருரையாளர், பேராசிரியர், எனப் படிப்படியாக உயர்ந்து 1991ஆம் ஆண்டில் விருப்ப ஓய்வுபெற்றார். இதில் 20 ஆண்டுகள் தமிழ்த்துறையின் தலைவராகப் பணியாற்றினார்.

நூல்கள்

பால்வீதி, நேயர் விருப்பம், கரைகளே நதியாவதில்லை, அவளுக்கு நிலா என்று பெயர், முட்டைவாசிகள், மரணம் முற்றுப்புள்ளி அல்ல, விலங்குகள் இல்லாத கவிதை, சொந்தச் சிறைகள், புதுக்கவிதையில் குறியீடு, சுட்டுவிரல் பாடல், கம்பனின் அரசியல் கோட்பாடு, அமரர் ஏவி. எம். அறக்கட்டளை நினைவுச் சொற்பொழிவு, ஆலாபனை

விருதுகள்

சாகித்ய அகாடமி விருது, கலைமாமணி விருது

(😊)(😊)(😊) @@@@@@@@@@@@ (😊)(😊)(😊)

கவிதைகள்

அப்துல் ரகுமானின் முதல் கவிதைத் தொகுப்பு நூல் பால்வீதி. 1974-இல் வெளிவந்தது. பாலைச் சுண்டக் காய்ச்சித் திரட்டாகக் கட்டிப் படுத்தியது போன்று, சிந்தனையையும் கற்பனையையும் திரட்டி வடித்த புதுக்கவிதைகள் கொண்டது.

அடுத்து வெளிவந்தது, கவியரங்கங்களில் அவர் பல ஆண்டுகளாகப் படைத்த கவிதைகளுள் தெரிந்தெடுத்த சிலவற்றையும், இந்தி உருது இசைப்பாடல் வடிவங்களைத் தமிழில் அறிமுகப்படுத்திப் படைத்த பாடல்களையும் கொண்ட நேயர் விருப்பம். இது 1978-இல் வெளிவந்தது. அதைத் தொடர்ந்து சுட்டுவிரல் (1989), ஆலாபனை (1995), விதைபோல் விழுந்தவன் (1998), முத்தமிழின் முகவரி (1998), பித்தன் (1998) ஆகிய புதுக்கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். 2002 - இல் வெளிவந்துள்ளது மின்மினிகளால் ஒரு கடிதம் என்னும் நூல். இது அரபி, உருது மொழிகளின் கஸல் என்னும் காதல் கவிதை வடிவத்தைத் தமிழில் அறிமுகம் செய்ய இவர் படைத்த அழகிய காதல் இலக்கியம்.

இக்கவிதை நூல்கள் மட்டுமின்றி இரு ஆராய்ச்சி நூல்கள், பத்துக்கும் மேற்பட்ட இலக்கியக் கட்டுரை நூல்கள், பிறமொழிக் கவிதைகளை மொழிபெயர்த்து விளக்கி எழுதிய பல கட்டுரைத் தொகுதிகள் என்று பல நூல்களைப் படைத்து வெளியிட்டுள்ளார். தொடர்ந்து எழுதி வருகின்றார்.

நண்பர்களே, ந.பிச்சமூர்த்தி, சிற்பி ஆகியோரின் கவிதைகள் பற்றிய பாடங்களை முன்பு படித்தீர்கள். அவற்றின்வழி புதுக்கவிதை பற்றி அறிந்திருக்கிறீர்கள்.

புதுக்கவிதை வடிவம்

சிற்பியும் அப்துல் ரகுமானும் தமிழ் கற்றுப் புலமை பெற்ற பேராசிரியர்கள். இவர்களும் மீரா, அபி, மேத்தா, தமிழன்பன்,

இன்குலாப் போன்ற பிற தமிழ்ப் பேராசிரியர்களும் யாப்பு இலக்கணக் கட்டுப்பாட்டை மறுத்த புதுக்கவிதையை எழுதத் தொடங்கினர். இதன் பிறகுதான் 'இலக்கணத்தை மீறிக் கவிதை எழுதினால் தமிழ்மொழி அழிந்துவிடும்' என்ற தவறான எண்ணம் அகன்றது. புதுக்கவிதையைக் கடுமையாக எதிர்த்து வந்த பலர் அமைதி அடைந்தனர். கவிதையின் பரிணாம வளர்ச்சி என்று புதுக்கவிதையை ஏற்றுக் கொண்டனர். விலங்குகள் இல்லாத கவிதை என்ற அப்துல் ரகுமானின் கட்டுரை நூல் புதுக்கவிதை பற்றிய பல தவறான ஐயங்களைப் போக்கியது.

இக்கால வாழ்வியல் சூழல் ஏற்படுத்தும் உள்ள உணர்வுகளை, வாழ்க்கைச் சிக்கல்களைக் கவிஞன் சரியாக வெளியிடப் பொருத்தமான வடிவம் புதுக்கவிதைதான் என்பது அப்துல் ரகுமானின் நம்பிக்கை.

தம் கவிதை பற்றிய கொள்கை அறிக்கை

பாரதியார் 'நமக்குத் தொழில் கவிதை, நாட்டுக்கு உழைத்தல்' என்று கொள்கை அறிவிப்புச் செய்தார். தமக்குத் தொழிலே கவிதை படைப்பதுதான் என்பது அவர் கருத்து. அவர் வழியில் வந்த தமிழ்க்கவிஞர் அப்துல் ரகுமானோ, தமக்கு உயிரும் வாழ்க்கையுமே கவிதைதான் என்கிறார். எழுதுகோலைத் (பேனா) தம் கையின் ஆறாவது விரலாகவே உணர்கிறார். 'இந்த ஆறாவது விரல் வழியே வடியும் இரத்தமும் சதையும்தாம் தம் எழுத்துகள்' என்று அவர் சொல்கிறார்.

என் ஆறாவது விரல் வழியே
சிலுவையிலிருந்து
வடிகிறது ரத்தம்
ஆம் –
என் 'மாம்சம்'
வார்த்தை ஆகிறது

அவரது முதல் நூலான பால்வீதியின் முதல் கவிதையே இவ்வாறு அவர் கவிதை பற்றிய கொள்கை அறிக்கையாக அமைகிறது.

நண்பர்களே, திருமறை பைபிளைப் படித்தவர் ஒவ்வொருவருக்கும் இக்கவிதை 'ஆதியாகமத்தில்' வரும் மனிதன் படைக்கப்பட்ட செய்திகளை நினைவூட்டும். ஆதியில் தேவனிடம் இருந்த 'வார்த்தை மாம்சம் ஆகியது' - அதாவது 'வார்த்தையால் தேவன் முதல் மனிதன் ஆதாமைப் படைத்தார்' , என்பதே அச்செய்தி. அப்துல் ரகுமானின் கவிதையில் 'மாம்சம் வார்த்தை' ஆகிறது.

இந்தக் கவிதை நமக்கு எதை உணர்த்துகிறது?

1. சிலுவையில் ஏசுபெருமான் சிந்திய இரத்தம் மனித குலத்தைப் பாவ வழியிலிருந்து மீட்டது. அன்பு என்னும் தூய நெறியில் செலுத்தியது. உலகம் அடையும் வாழ்க்கைச் சிக்கல்களால் கணந்தோறும் சிந்தனைச் சிலுவையில் அறையப்படுகிற கவிஞனின் இரத்தமே அவன் கவிதை. இது மனித குலத்தை மீட்டு நல்வழியில் செலுத்தும்.

2. சிலுவையில் ஏசு சொன்ன வாக்கியம் 'என் தேவனே ! ஏன் என்னைக் கைவிட்டீர்?' என்பது, அப்துல் ரகுமான் அதை 'என் தேவனே ! எனக்குக் கைகொடுத்தீர்' என மாற்றி இக்கவிதைக்குத் தலைப்பாகக் கொடுத்துள்ளார். எழுதும் கையைக் கொடுத்ததற்கு நன்றி கூறுவதற்காகவே இந்த மாற்று உரை.

பாடுபொருள் வகைகள்

'மானிட முன்னேற்றம் தமது கவிதைகளின் குறிக்கோள்' என்ற அவரது படைப்பு நோக்கம் இன்று வரை அவர் எழுதியுள்ள கவிதைகள் அனைத்திலும் செயல்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

காதல், இயற்கை, அரசியல், சமூகம், அறிவியல், ஆன்மிகம் முதலிய வாழ்வியல் துறைகள் எதையுமே அவர் விட்டுவைக்கவில்லை. தெளிந்த சிந்தனையுடனும், ஆழ்ந்த தூய உணர்வுடனும், இனிய அழகியலுடனும் கவிதைகளைப்

படைத்து வழங்கி வருகிறார். சான்றாக ஒருசில கவிதைகளே இங்குத் தரப்படுகின்றன.

சமயம் – ஆன்மிகம்

இறைவனுக்கு எத்தனையோ பெயர்கள் ! எல்லாப் பெயரும், ஒருவனான இறைவனையே குறிக்கின்றன என்று சமய ஒற்றுமை பேசுகிறார் அப்துல் ரகுமான்.

அரன் என்றழைப்பினும்
வரன் கொடுப்பவன்நீ
அரியென்று இசைப்பினும்
சரியென்று இசைப்பாய்
கர்த்தன் என்று உரைப்பினும்
அர்த்தம் நீதான்
அல்லா எனினும் நீ
அல்லாது வேறு யார்?

(ஆயிரம் திருநாமம்பாடி - நேயர்விருப்பம், ப.31)

(அரன் = சிவன்; அரி = திருமால்; வரன் = வரம்; அல்லா = இறைவன்)

இயற்கை

இயற்கைப் பொருள்களை அப்படியே வருணனை செய்வதில்லை அப்துல் ரகுமான். அவற்றுக்குள்ளும் ஆழ்ந்த வாழ்வியல் உண்மைகளைக் காண்கிறார்.

சின்னஞ் சிறிய பனித்துளிகளையும் பெரிய சூரியனையும் ஒரு கவிதையில் நிறுத்திக் காட்சி படைக்கிறார். அது ஒரு புதிய காட்சி. நம் மனச்சாட்சியை உசுப்பும் சாட்சி என்ற கவிதை :

வெண்புள்ளி குத்திய
இரவு நீக்ரோவைப்
படுகொலை செய்கிறான்
வெள்ளையன்

தரையின்
பச்சை நாக்குகளில்
வார்த்தையாக முயலும்

ரத்தத் துளிகள் (சாட்சி, பால்வீதி, ப.74)

(இரவு = நீக்ரோவாகவும்; சூரியன் = வெள்ளையனாகவும்; புல் இதழ்கள் = பச்சை நாக்குகளாகவும்; பனித்துளிகள் = இரத்தத் துளிகளாகவும் உருவகப் பொருளில் வந்தன; வெண்புள்ளி குத்துதல் = நட்சத்திரங்கள் மின்னுதல், இங்கு நீக்ரோக்களைப் புள்ளி குத்தி அவமானப்படுத்துதல்)

வெள்ளை இனத்தவரின் இனவெறிக் கொடுமைக்கு உள்ளாகும் நீக்ரோ மக்களின் மீது கவிஞர் கொண்ட பரிவு இந்த உருவகக் கவிதையாய் உருவாகியிருக்கிறது. உலகையெல்லாம் தன் உறவாகப் பார்க்கும் கவிஞருக்கு 'அந்த விடிகாலைப் பொழுது நீக்ரோக்களுக்கு எப்போது விடியும்?' என்ற தவிப்பு !

உழைப்பு

உழைத்துச் சிவந்த கைகளைத் திருமகளின் இருப்பிடமான செந்தாமரையாகக் காண்கிறார். தனரேகை, கையில் இல்லை, தரிசுகளில் ஏர்முனை கீறும் கோடுகள் தாம் தனரேகை என்கிறார். (நகமகுடம், நேயர் விருப்பம், ப.42)

மணி வயிரத் தோள்என்ற
மந்தரங்கள் இங்கிருக்கத்
தயக்கமென்ன அமுது எடுக்கத்
தரைக்கடலையே கடைவோம் !

(மந்தரம் = பாற்கடலைக் கடையப் பயன்பட்ட மந்தர மலை; தரைக்கடல் = தரையாகிய கடல்)

வயிரம் பாய்ந்த தோள்கள் என்னும் மந்தர மலையைக் கொண்டு, பூமியாகிய பாற்கடலில் உழைத்து, மானிடம் சாகா இருப்பதற்குரிய அமுதாகிய அனைத்துப் பயன்களையும் அடைவோம் என்பது பொருள்.

சமூக உணர்வு

காற்றைப் பாடும்போது, சமூகத்தில் சாதியின் பெயரால் வளர்ந்து நிற்கும் கொடிய நோயான தீண்டாமையைக் கண்டிக்கிறார்.

கை இல்லாத நீ
எல்லாரையும் தழுவுகிறாய்
கை இருக்கும் நாம்
சக மனிதனிடமே
தீண்டாமையைக்
கடைப்பிடிக்கிறோம்
கையிருப்பது ஒரு குறையோ?
(அந்த இடம், ஆலாபனை)

கைகள் இல்லாத காற்று எல்லாரையும் தழுவுகிறது. கையிருக்கும் மனிதன் தன் உடன்பிறப்பான இன்னொரு மனிதனை இழிந்த சாதி என்று தீண்ட மறுக்கிறான். இதைச் சொல்லும் கவிஞர் "கையிருப்பது ஒரு குறையோ?" என்று கேட்கிறார்.

சுட்டுவிரல் என்னும் நூலில் சமுதாயச் சீரழிவுகளுக்குக் காரணமானவர்கள் அனைவரையும் குற்றம் சாட்டுகிறார். சினம் கொண்டு சாடுகிறார். அதில் அப்துல் ரகுமானின் 'கவிக்கோபம்' பொங்குகிறது. கோபம் கூட மிக அழகாக இருக்கிறது.

இசை

கவிஞர் மெழுகு வத்தியைக் கூர்மையாகப் பார்த்திருக்கிறார். நமக்காக அழுது உருகும் அதன் தோற்றத்தில் ஒரு புதிய கற்பனை பிறக்கிறது :

ஒற்றை நெருப்பு உதட்டின்
வாசிப்பில்
புல்லாங்குழலே
உருகுகிறது (பால்வீதி. ப . 51)

மெழுகு வத்தியின் சுடர் ஒற்றை உதடாகத் தெரிகிறது. மெழுகுவத்தி புல்லாங்குழலாகத் தோன்றுகிறது. வெளிச்சம் இசையைப்போல் பரவுகிறது. நமக்கு இன்பம் தருகிறது. அந்த இசையின் இனிமையில் புல்லாங்குழலே உருகிக் கரைகிறது.

ஒளியையும் ஒலியையும் ஒன்றிணைத்து இசைக்கு ஒரு புதிய அடையாளத்தை உருவாக்குகிறார் கவிஞர்.

ஆலாபனை நூல் முழுக்க வாழ்வின் சிறந்த அம்சங்களை, அழகை எடுத்துக் காட்டி, அவருக்குள் இருக்கும் பாடகன் பாடுகிறான். ஆலாபனை : ராக விரிவை இசைக்கலைஞர் இசைக்கும் முறை. வாழ்வையே இசை ஆலாபனையாக உணர்ந்து ரசிக்கும் ரசிகனை இங்குக் காணலாம்.

காதல்

உலகக் கவிஞர்களில் காதலைப் பாடாதவர் எவரும் இல்லை. காதலர் பிரிந்து இருக்கும் போது தோன்றும் துயரத்தில்தான் காதலின் உயிர்த் துடிப்பே இருக்கிறது. அந்தப் பிரிவும் ஏக்கமும்தாம் காதலை வளர்க்கும் ஊட்டச் சத்து; கண்ணீர்தான் காதலை வாடாமல் வாழவைக்கும் ஊற்று நீர். அப்துல் ரகுமானின் காதல் கவிதைகள் எல்லாம் இந்தப் பிரிவையும் ஏக்கத்தையும் துன்பத்தையுமே பாடுகின்றன. பலநூறு கவிதைகள் படைத்தும் நிறைவு அடையாமல் ஒரு தனி நூலே படைத்திருக்கிறார். அதுதான் மின்மினிகளால் ஒரு கடிதம். தான் பாடுவதற்கே காதலியின் நினைவுதான் காரணம் என்று சொல்கிறார் :

கற்களில் இடறும்போது
பாடும் நதியைப்போல
உன் நினைவுகள் இடறும்போது
நான் பாடுகிறேன்
(மின்மினிகளால் ஒரு கடிதம், ப. 69)

(இடறுதல் = மோதிக்கொள்ளுதல்)

உண்மை அழகு

உலகத்தில் நாம் 'உயர்ந்தவை அல்ல' என்று கருதும் பல பொருள்களிலும் சிறந்த அம்சங்கள் இருப்பதை இவருக்குள் இருக்கும் பித்தன் பாடுகிறான். பித்தன் நூல் முழுதும் இந்த முரண் அழகைப் பாடுகிறது.

தமிழ் மின்நூலகம்

https://tamildigitallibrary.in/Articles/%E0%AE%85%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%81%E0%AE%B2%E0%AF%8D%20%E0%AE%B0%E0%AE%95%E0%AF%81%E0%AE%AE%E0%AE%BE%E0%AE%A9%E0%AF%8D

படைப்பாளர் பெயர்	அப்துல் ரகுமான்
மற்ற பெயர்கள்	கவிக்கோ
பிறப்பு - இறப்பு	1937, நவம்பர் 9 - 2017, ஜூன் 2
பிறந்த ஊர்	கிழக்குச் சந்தைப்பேட்டை, மதுரை, தமிழ்நாடு, இந்தியா
பெற்றோர்	மஹி என்னும் சையத் அஹமத் – ஜைனத் பேகம்
வாழ்க்கைத் துணை	மெகபூ பேகம்
பிள்ளைகள்	சையது அஷ்ரப், வஹிதா பேகம்
பதவிகள்	தமிழ்நாடு வக்பு வாரியத் தலைவர்
பிற பணிகள்	கவிஞர், எழுத்தாளர், பதிப்பாசிரியர்
விருதுகள் / பட்டங்கள்	தமிழ்நாடு அரசின் பாவேந்தர் பாரதிதாசன் விருது, கலைட விருது, சாகித்திய அகாதெமி விருது, கம்பர் விருது, தமிழ விருது, கலைஞர் விருது, பொதிகை விருது, சிற்பி அறக்கட விருது, சி.பா. ஆதித்தனார் இலக்கிய பரிசு
குறிப்பிடத்தக்க படைப்புகள்	கரைகளே நதியாவதில்லை, விலங்குகள் இல்லாத கவிதை கடவுளின் முகவரி, இறந்ததால் பிறந்தவன், ஆலாபனை
நாட்டுடைமை ஆண்டு	2025
இறந்த ஊர்	சென்னை

அப்துல் ரகுமான்

https://www.tamilvu.org/ta/courses-degree-p103-p1032-html-p1032511-25864

தமிழ்நாட்டில், மதுரையில் 9-11-1937-இல் பிறந்தார் அக்காலத்தில் தமிழ், உருது ஆகிய இருமொழிகளிலும் சிறந்த எழுத்தாளராக விளங்கிய 'மஹதி' சையத் அஹ்மத் என்பார் இவருடைய தந்தையார் ஆவார். இதனால் இளவயதில் இருந்தே மொழிப் புலமையும் கவிதை எழுதும் ஆற்றலும் அப்துல் ரகுமானிடம் வளரத் தொடங்கின.



- **கல்வியும் பணியும்**

தமிழ்க் கல்விக்குச் சிறந்த கல்லூரி என்று புகழ் பெற்றிருந்த மதுரை தியாகராசர் கல்லூரியில் இளங்கலை, முதுகலைப் பட்டங்களைப் பெற்றார். சென்னை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் **புதுக்கவிதையில் குறியீடு** என்னும் பொருள்பற்றி ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம் பெற்றார். வாணியம்பாடியில் இசுலாமியாக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக முப்பது ஆண்டுகள் பணியாற்றினார். கடந்த பதின்மூன்று ஆண்டுகளாகச் சென்னையில் இருந்து தம் படைப்புப் பணியைத் தீவிரத்துடன் செய்து வருகிறார்.

- **கவிதை ஆர்வம்**

அப்துல் ரகுமான் பள்ளிப் பருவத்திலேயே கவிதை புனைந்தவர். கல்லூரி நாட்களிலேயே புதுமையாக எழுதிப் புகழ் பெற்றவர். கல்லூரி இலக்கிய மன்றங்களும், வானொலி நிலையங்களும், அண்ணாவின் அரசியல் இயக்கமும் நிகழ்த்திய பல கவியரங்கங்களில் பங்கேற்றார். புதுமையாய்ப் பாடும் திறத்தால் தமிழகம் முழுதும் புகழ் பரவப் பெற்றார்.

- **கவிராத்திரி**

பேராசிரியராகப் பணியாற்றிய காலத்தில் புதுக்கவிதையை ஆயிரக் கணக்கானோர் கூடிச் சுவைக்க வழி செய்தார். கவிராத்திரி என்ற பெயரில் கவியரங்கத்தைப் புதுமைப் படுத்தினார். தம் மாணவர்களைப் புதுக்கவிதை எழுதவைத்து அவர்களின் கவிதைகளைத் தொகுத்து நூல்களாக வெளியிட்டார்.

- **அன்னம் பதிப்பகம்**

தம் வகுப்புத் தோழரும் கவிஞருமான **மீரா**வுடனும் மற்ற நண்பர்களுடனும் சேர்ந்து, புதிய படைப்பாளிகளின் இலக்கிய நூல்களை வெளியிடுவதற்காகவே **அன்னம்** என்னும் பதிப்பகத்தை உருவாக்கினார்.

- **தமிழ் உணர்வு**

தமிழ்மொழியின் மீது பற்றும், சமுதாய நலனில் அக்கறையும், நல்லொழுக்கமும் நிறைந்தவர் அப்துல் ரகுமான்.

தம் அறுபதாவது வயது நிறைவைக் கொண்டாட மாணவர்களும் நண்பர்களும் திரட்டித் தந்த நிதியைக் கொண்டு தம் பெயரில் ஒரு கவிதை அறக்கட்டளை நிறுவினார். ஆண்டு தோறும் தமிழில் சிறந்த கவிதை நூல் படைக்கும் கவிஞருக்கு ரூபாய் முப்பதாயிரம் பரிசளித்துப் பாராட்டி வருகிறார்.

- **சிறப்பும் விருதும்**

கவிக்கோ என்னும் அடைமொழியால் தமிழகத்திலும், தமிழறிந்த அயலகங்களிலும் அறியப்படும் அப்துல் ரகுமான், 1999-ஆம் ஆண்டுக்கான தமிழ்க் கவிதைக்குரிய **சாகித்திய அக்காதெமி விருது** பெற்றவர். 1989-இல் தமிழ்ப் பல்கலைக் கழகம் வழங்கிய **தமிழன்னை விருது**, தமிழக அரசு வழங்கிய **பாவேந்தர் பாரதிதாசன் விருது**, **கலைமாமணி விருது** ஆகியவற்றைப் பெற்றார். 1997-ஆம் ஆண்டு **கலைஞர் விருது** பெற்றார். இவையல்லாத பல்வேறு விருதுகளும் சிறப்புகளும் பெற்றிருக்கிறார்.

கவிக்கோ அப்துல் ரஹ்மான் கவிதைகள்

http://www.mailofislam.com/kavikko_abdul_rahuman

'கவிக்கோ' அப்துல் ரஹ்மானின்
சாகித்ய அகாடெமி விருது பெற்ற ஆலாபனை தொகுப்பிலிருந்து:

கொடுக்கிறேன்.....

கொடுக்கிறேன் என்று நினைப்பவனே!
கொடுப்பதற்கு நீ யார்?

நீ கொடுப்பதாக நினைப்பதெல்லாம்
உனக்குக் கொடுக்கப்பட்டதல்லவா?

உனக்கு கொடுக்கப்பட்டதெல்லாம்
உனக்காக மட்டும் கொடுக்கப்பட்டதல்ல

உண்மையில் நீ கொடுக்கவில்லை
உன் வழியாகக் கொடுக்கப்படுகிறது

நீ ஒரு கருவியே

இசையைப் புல்லாங்குழல் கொடுப்பதில்லை

இசை வெளிப்படுவதற்கு அது ஒரு கருவியே

இயற்கையைப் பார் அது கொடுக்கிறோம் என்று
நினைத்துக் கொடுப்பதில்லை

தேவையுள்ளவன் அதிலிருந்து
வேண்டியதை எடுத்துக்கொள்கிறான்

நீயும் இயற்கையின் ஓர் அங்கம்

என்பதை மறந்துவிடாதே

கொடுப்பதற்குரியது பணம் மட்டும்
என்று நினைக்காதே

உன் வார்த்தையும் ஒருவனுக்குத்
தாகம் தணிக்கலாம்

உன் புன்னகையும் ஒருவன் உள்ளத்தில்
விளக்கேற்றலாம்

ஒரு பூவைப் போல் சப்தமில்லாமல் கொடு

ஒரு விளக்கைப் போல பேதமில்லாமல் கொடு

உன்னிடம் உள்ளது நதியில் உள்ள
நீர்போல் இருக்கட்டும்

தாகமுடையவன் குடிக்கத்
தண்ணீரிடம் சம்மதம் கேட்பதில்லை

கொடு
நீ சுத்தமாவாய்

கொடு
நீ சுகப்படுவாய்

கொடு
அது உன் இருத்தலை நியாப்படுத்தும்

ெெெெெெெெெெ

'கவிக்கோ' அப்துல் ரஹ்மானின்
சாகித்ய அகாடெமி விருது பெற்ற ஆலாபனை தொகுப்பிலிருந்து:

கண்ணீரின் ரகசியம்....

'இறைவா எனக்குப்
புன்னகைகளைக் கொடு' என்று
பிரார்த்தித்தேன்

அவன் கண்ணீரைத் தந்தான்

'வரம் கேட்டேன்
சாபம் கொடுத்து விட்டாயே'
என்றேன்

இறைவன் கூறினான்:

மழை வேண்டாம்
விளைச்சலை மட்டும் கொடு என்று
எந்த உழவனாவது கேட்பானா

ஆனால் நீ
அப்படித்தான் கேட்கிறாய்

கண்ணீரில் புன்னகையும்
புன்னகையில் கண்ணீரும்
ஒளிந்திருப்பதை நீ அறிய மாட்டாய்

உண்மையைச் சொல்வதானால்
கண்ணீர் கண்களின் புன்னகை
புன்னகை இதழ்களின் கண்ணீர்

வைகறைப் பொழுதில் மலர்களின் மீது
பனித்துளிகளை நீ கண்டதில்லையா?

புன்னகை தன்னைக் கண்ணீரால்
அலங்கரித்துக் கொள்ளும்
அற்புதம் அல்லவா அது!

மழை மேகங்களில்

மின்னல் உதிப்பதை
நீ பார்த்ததில்லையா?

கண்ணீரில் இருந்து
சிரிப்புப் பிறக்கும்
அழகல்லவா அது?

முத்து என்பது என்ன?
சிப்பிக்குள் இருந்து
தவம் செய்யும் கண்ணீர்த் துளி
புன்னகையாகும் அதிசயம்தானே அது

கன்ணீரில் மலரும்
புன்னகைப் பூக்கள்
வாடுவதில்லை என்பதை
அறிவாயாக!

மேலும் கண்ணீர்தான்
உன்னைக் காட்டுகிறது

புன்னகையோ சில நேரங்களில்
உனக்கு திரையாகிவிடுகிறது

(😊)@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@(😊)

கவிக்கோ அப்துல் ரஹ்மானின் 'சுட்டுவிரல்' கவிதை தொகுப்பிலிருந்து

உதிரும் சிறகுகள்…

மழை ஓய்ந்த
முன்னிரவில்
சாளரத்தின் வழியே
அறையில் புகுந்து
மின் விளக்கை
மொய்த்து
முட்டி மோதி
சிறகுகள் உதிர்த்து விழும்
ஈசல் கூட்டம்

காலையில்
திட்டியபடியே
செத்த உடல்களோடு

சிறகுகள் கூட்டிக்
குப்பையில் எறிந்து -

ஏதோ இருளை
மோகித்து
ஏதோ சாளர வழியே
நுழைந்து சிறகுகள்
உதிர்க்கப் போவோம்
நாம்.

@@@@@@@@@@@@@@@@@@@@@@@

1978, நவம்பர் 14-ஆம் நாள் காயல்பட்டினத்தில் நிகழ்ந்த அனைத்துலக இஸ்லாமியத் தமிழிலக்கிய மாநாட்டில் கவிக்கோ தலைமையில் நடந்த இஸ்லாமியக் கவியரங்கில் அவர் பாடிய தலைமைக் கவிதையின் ஒரு பகுதி:

தாயிப் நகரில் தாஹா நபிகள்...

நபிகள் பெருமான் -
இல்லாமல் வாடிய ஏழை உலகம்,
கேட்காமலேயே கிடைத்த அருட்கொடை !
தட்டாமலேயே திறந்த கதவு !
தேடாமலேயே தெரிந்த மூலிகை !

இளமையில் பெற்றோரை
இழந்த இவ்வனாதைதான்
உலகுக்கே தாயாகி ஊட்டி வளர்த்தவர்!

படிக்கத் தெரியாத – இந்தப்
பாமர நபியிடம்தான்
பள்ளிக் கூடங்களும் பாடம் பயின்றன
இல்லை ..
பல்கலைக் கழகங்களே பாடம் பயின்றன !

கந்தல் அணிந்த – இந்தக்
கருணை நபி கையால்தான்
அம்மண உலகம் ஆடையைப் பெற்றது!

பாலையில் முளைத்த – இந்த

பசுமர நிழலில்தான் வெயிலும்கூட இளைப்பாற வந்தது !

இந்த ஏழையை ஈன்ற பின்னரே
கிடக்காத புதையல் கிடைத்தது போன்று
இந்த உலகம் இறுமாப் படைந்தது !

மண்ணில் – இந்த மணிவிளக்கைக்
கண்டபின்தான் விண்ணும்
தன் சுடர்களுக்காய் வெட்கம் கொண்டது !

வல்லூறுகளும் – இவர் வலைக்குள் குடிபுகுந்து
வெள்ளைப் புறாக்களாய்
விண்ணெங்கும் பறந்தன !

உயர்மறை மகுடி – இவர் ஊதியத்கைக் கேட்டவுடன் நாகத்தின்
பறக்களிலும்
நல்லமுதம் ஊறியது !

தனித்தனி சாதி அறைகளில் கிடந்த
மனித எழுத்துக்களை ஒரே வாக்கியமாக
அச்சுக் கோர்த்து சகோதரத்துவ
சமுதாயம் கண்டவர் !

பாட்டால் புகழைப் பலர் பெறுவர் – ஆனால்
பரமனின் நபியைப் பாடுவதால் நமது
பாட்டுக்கல்லவா பெரும் புகழ் கிடைக்கும்

அன்று – அந்தத் தாயிப் நகரில்
தாஹா நபிகள் !

தாயிப் வாசிகளே !
விந்தை மனிதர் நீர்!
கல்லின் மீதுதான்
பூவைத் தூவுவீர்

ஆனால் அன்று

(பூமான் நபியெனும்)
பூவின் மீதல்லவா
கல்லைச் சொரிந்தீர் !

வெல்வதாக நினைத்தீர் !
ஆனால் – தோற்றவர் நீங்களே !
நீங்கள் வணங்கும்
கற்களை அல்லவா
கருணைநபி காலடியில்
மண்டியிட வைத்தீர் !

உங்கள் கற்கள்
ஏற்படுத்தியவை காயங்கள் அல்ல !
பொறுமைக்குக் கிடைத்த
இரத்தினப் பதக்கங்கள் !
இறை சோதனையின்
குங்கும முத்தங்கள் !

பொய்மையை எதிர்த்த
வாய்மைத் தூதருக்கு
ரணங்கள் தானே
ஆபரணங்கள் !

அதோ பாருங்கள் !
நீங்கள் எறிந்த கற்கள்
பச்சை ரத்தம்
படிந்து கிடப்பதை !
காயங்கள் செய்த
பிரச்சாரத்திற்குரிய
பெரிய வெற்றி !
அவை கூட
மதம் மாறி விட்டன !

தாயிப் வாசிகளே !
கனிமரம் என்பதால்
கல்லெறிந்தீரோ?
கல்லடி பட்டால்
கனி மட்டுமா உதிரும்?
காய்கூட உதிருமே !

ஆனால்
கல்லடிக்குக்

கனிமட்டும் உதிர்ந்த
கருணை மரத்தை
வேறு எங்கேனும்
கண்டவருண்டோ?

எங்கள் பெருமான்
காயம்பட்டதோ
அன்றொருநாள் !
ஆனால் இரத்தமோ
இன்றுமல்லவா வழிகிறது
எங்களின்
எழுதுகோல் வழியே !

@@@@@@@@@@@@@@@

பாருக்குள்ளே நல்ல நாடு

அவர்களைச் சிறையில்
சந்தித்தேன்.

“என்ன குற்றம் செய்தீர்கள்”
என்று கேட்டேன்.

ஒவ்வொருவராகச்
சொன்னார்கள்..

எங்கள் வீட்டில்
திருடிக்கொண்டு ஒருவன் ஓடினான்.
“திருடன் திருடன்” என்று கத்தினேன்.
அமைதிக்குப் பங்கம் விளைவித்தாக என்னைக்
கைது செய்து விட்டார்கள்.

“என் வருமானத்தைக் கேட்டார்கள்”
‘நான் வேலையில்லாப் பட்டாதாரி’ என்றேன்
வருமானத்தை மறைத்தாக வழக்குப்
போட்டு விட்டார்கள்.

“நான் கரி மூட்டை தூக்கும் கூலி”
கூலியாக கிடைத்த ரூபாய் நோட்டில்
கரி பட்டுக் கறுப்பாகிவிட்டது.
கறுப்பு பணம் வைத்திருந்ததாகக்

கைது செய்து விட்டார்கள்.

“என் வயலுக்கு வரப்பு எடுத்துக் கொண்டிருந்தேன் பிரிவினைவாதி என்று பிடித்துக் கொண்டு வந்து விட்டார்கள்”

“அதிகாரி லஞ்சம் வாங்கினார், தடுத்தேன்.
அரசுப் பணியாளரை அவருடைய கடமையைச்
செய்ய விடாமல் தடுத்ததாகத்
தண்டித்து விட்டார்கள்.”

“அலிபாபாவும் நாற்பது திருடர்களும்” படச்
சுவரொட்டியை ஒட்டிக் கொண்டிருந்தேன்.
சட்டமன்ற உறுப்பினர்களை அவதூறு செய்ததாக அழைத்துக் கொண்டு
வந்து விட்டார்கள்”

“வறுமைக் கோட்டை அழிப்போம்” என்று பேசினேன். அரசாங்க
சொத்தை அழிக்கத் தூண்டியதாக அடைத்துப்போட்டுவிட்டார்கள்”

“ஊழல் பேர்வழிகளை நாடு கடத்த வேண்டும்”
என்று எழுதினேன்,“கடத்தல்காரன்” என்று
கைது செய்து விட்டார்கள்.

“நான் பத்திரிக்கை ஆசிரியன். தலையங்கத்தில்
உண்மையை எழுதினேன். நாட்டின்
ஸ்திரத் தன்மையைக் குலைத்ததாகக் கொண்டு
வந்து விட்டார்கள்”

“சுதந்திர தின விழாவில்
‘ஜன கண மன’ பாடிக் கொண்டிருந்தார்கள்.
நான் பசியால் சுருண்டு படுத்துக்கொண்டிருந்தேன்.
எழுந்து நிற்க முடியவில்லை.
தேசிய கீதத்தை அவமதித்து விட்டதாகச் சிறையில் அடைத்து
விட்டார்கள்”

“அக்கிரமத்தை எதிர்த்து
ஆயுதம் ஏந்தச் சொன்னான் கண்ணன்”
என்று யாரோ கதாகாலட்சேபத்தில் சொல்லியிருக்கிறார்கள்

என்பெயர் கண்ணன்.
“பயங்கரவாதி” என்று என்னைப் பிடித்துக் கொண்டு வந்து விட்டார்கள்.

நான் வெளியே வந்தேன்.
சட்டம் ஒழுங்குப் பிரச்சினை எதுவும் இல்லாமல் நாடு அமைதியாக இருந்தது..

@@@@@@@@@@@@@@@@@@@@

ஆன்மாவின் விபச்சாரம்

உலகுக் கெல்லாம்
ஒருவனே தலைவன்
தலைவணக் கம்அந்தத்
தலைவனுக் கேயென
அறவுரை கூறிய
ஆன்றோர் களையே
அவதாரம் என்பதும்
அவரடி வீழ்வதும்
தலைவனை ஆகழும்
தற்குறித் தனமே

அரும்பிய துருவமீன்
அதனை நோக்கியே
திரும்ப வேண்டிய
திசைகாட் டியின்முள்
மின்மினிக் கெல்லாம்
மேனி திருப்பினால்
கப்பல் எப்படிக்
கரைபோய்ச் சேரும் ?

தலைவன் ஒருவனைத்
தலையால் வணங்குவதே
தலைகற் பாகும்
தலைவனை அன்றி
மற்ற வற்றை
மகேசன் என்றே
தொழுவது கொடிய
தொழுநோய் ஆகும்
மேலும் அது
ஆன்மா செய்யும்
விபச்சாரம் ஆகும்

@@@@@@@@@@@@@@@@@@@@@@

கவிக்கோ அப்துல் ரஹ்மானின் ‘சுட்டுவிரல்’ கவிதை தொகுப்பிலிருந்து

தொலைந்து போனவர்கள்...

விடிந்ததென்பாய் நீ அனுதினமும் – வான்
வெளுப்பது உனது விடியலில்லை
முடிந்ததென்பாய் ஒரு காரியத்தை – இங்கு
முடிதல் என்பது எதற்குமில்லை
மணந்தேன் என்பாய் சடங்குகளும் – வெறும்
மாலை சூட்டலும் மணமில்லை
இணைந்தேன் என்பாய் உடற்பசியால் – உடல்
இரப்பதும் கொடுப்பதும் இணைப்பல்ல.
கற்றேன் என்பாய் கற்றாயா? – வெறும்
காகிதம் தின்பது கல்வியில்லை
பெற்றேன் என்பாய் எதைப்பெற்றாய்? – வெறும்
பிள்ளைகள் பெறுவது பெறுவதல்ல
குளித்தேன் என்பாய் யுகயுகமாய் – நீ
கொண்ட அழுக்கோ போகவில்லை
அளித்தேன் என்பாய் உண்மையிலே – நீ
அளித்த தெதுவும் உனதல்ல
உடை அணிந்தேன் எனச் சொல்லுகிறாய் – வெறும்
உடலுக் கணிவது உடையல்ல
விடையைக் கண்டேன் என்றுரைத்தாய் – ஒரு
வினாவாய் நீயே நிற்கின்றாய்
தின்றேன் என்பாய் அணுஅணுவாய் – உனைத்
தின்னும் பசிகளுக் கிரையாவாய்
வென்றேன் என்பர் மனிதரெல்லாம் – பெறும்
வெற்றியிலே தான் தோற்கின்றார்
ஆட்டத்தில் உன்னை இழந்து விட்டாய் – உன்
அசலைச் சந்தையில் விற்றுவிட்டாய்
கூட்டத்தில் எங்கோ தொலைந்துவிட்டாய் – உனைக்
கூப்பிடும் குரலுக்கும் செவிடானாய்
'நான்' என்பாய் அது நீயில்லை – வெறும்
நாடக வசனம் பேசுகிறாய்
'ஏன்'? என்பாய் இது கேள்வியில்லை – அந்த
ஏன் எனும் ஒளியில் உனைத் தேடு ?

அப்துல் ரகுமான்

https://www.hindutamil.in/news/blogs/87035-10.html

ராஜலட்சுமி சிவலிங்கம்

கவிக்கோ எனப் போற்றப்படும் தமிழ் கவிஞர்

‘கவிக்கோ’ என்று போற்றப்படும் சிறந்த தமிழ்க் கவிஞர் அப்துல் ரகுமான் (Abdul Rahman) பிறந்தநாள் இன்று (நவம்பர் 9). அவரைப் பற்றிய அரிய முத்துக்கள் பத்து:

* மதுரை கீழ்ச்சந்தைப் பேட்டையில் (1937) பிறந்தவர். தந்தை உருதுக் கவிஞர். தாத்தா உருது, பாரசீக மொழிகளில் கவிதை புனையும் ஆற்றல் மிக்கவர். அதனால், இயல்பிலேயே இவரும் கவிதை எழுதும் திறன் கொண்டிருந்தார்.

* பள்ளிப்படிப்பை முடித்த பிறகு, இவருக்கு மேற்கொண்டு படிக்க விருப்பம் இல்லை. தமிழில் மட்டுமே ஆர்வம் கொண்டிருந்தார். மதுரை தியாகராஜர் கல்லூரியில் தமிழை சிறப்புப் பாடமாக எடுத்துப் படிக்கலாம் என்பதை அறிந்தவர் மகிழ்ச்சியுடன் அங்கு சேர்ந்தார். இலக்கண, இலக்கியங்கள் பயின்றார். இவரும் கவிதை எழுதத் தொடங் கினார்.

* தமிழில் உயர்கல்வி பயின்றார். அப்போது, ஆங்கில இலக்கியம் மீதும் நேசம் பிறந்தது. கீட்ஸ், ஷெல்லி உள்ளிட்ட கவிஞர்களின் கவிதையில் மனம் கவரப்பட்டார். கல்லூரியில் நடக்கும் அனைத்து கவிதைப் போட்டிகளிலும் இவருக்குத்தான் முதல் பரிசு கிடைக்கும்.

* முதுகலைக் கல்வி பயிலும்போது, மவுலானா ஜலாலுத்தீன் ரூமி, இக்பால், தாகூர், கலீல் ஜிப்ரான் ஆகியோரது கவிதைகளைப் படித்தார். அவர்களைப் போலவே எழுத வேண்டும் என்று ஆசைப்பட்டு, அவ்வாறே எழுதவும் தொடங்கினார். ‘தமிழ்நாடு’ என்ற நாளிதழில் சில ஆண்டுகள் பணியாற்றினார். தமிழில் புதுக்கவிதைக் குறியீடுகள் குறித்து ஆராய்ந்து சென்னை பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார்.

* தமிழ், ஆங்கிலம், அரபி, உருது, பாரசீகம், இந்தி ஆகிய பல மொழிகளிலும் புலமை பெற்றிருந்தார். சமஸ்கிருதமும் கற்றார். எந்தத் துறையில் இறங்கினாலும் அதன் வேர் வரை சென்று ஆழக் கற்பது இவரது இயல்பு. 1974-ல் இவரது முதல் கவிதையான ‘பால்வீதி’ வெளிவந்தது.

* ‘திராவிட நாடு’, ‘திராவிடன்’, ‘முரசொலி’, ‘தென்றல்’, ‘இன முழக்கம்’, ‘மன்றம்’, ‘விகடன்’ உள்ளிட்ட பல இதழ்களில் இவரது தொடர் கட்டுரைகள், சிறுகதைகள் வெளிவந்தன. இலக்கியத்தின் பல களங்களில் முத்திரை பதித்தாலும், ஒரு

கவிஞராகவே இவர் புகழ்பெற்றார். இவரது தத்துவக் கவிதைகள் நல்ல வரவேற்பைப் பெற்றன.

* ‘வானம்பாடி’ இயக்கத்தின் முக்கிய கவிஞர்களில் ஒருவராக மலர்ந்தார். கவியரங்கக் கவிதைகளாலும் புகழ்பெற்றார். பேசும்போது சிலேடை மொழிகளாலும் மெல்லிய நையாண்டியாலும் மற்றவர்களைக் கவர்வது இவரது பாணி.

* வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியில் முதலில் தமிழ் விரைவுரையாளர், பின்னர் பேருரையாளர் அதன்பிறகு பேராசிரியராக உயர்ந்தார். தமிழ்த் துறை தலைவராக 20 ஆண்டுகள் பணியாற்றினார்.

* இவரது ‘ஆலாபனை’ கவிதைத் தொகுப்புக்காக சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டது. இதன்மூலம், வெகுகாலமாக தமிழ்க் கவிதைக்கு வழங்கப்படாமல் இருந்த இந்த விருதை தமிழுக்குப் பெற்றுத் தந்தார். ஹைக்கூ, கஜல் ஆகிய பிறமொழி இலக்கிய வகைகளை தமிழில் பரவச் செய்தார். சூஃபி பாடல்களின் தத்துவ தரிசனம் இவர் பாடல்களில் பிரதிபலிக்கும்.

* கவியரசர் பாரிவிழா விருது, தமிழன்னை விருது, பாரதிதாசன் விருது, கலைமாமணி, கம்பர் விருது, உமறுப்புலவர் விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றுள்ளார். ஆய்வுக் கட்டுரை, சொற்பொழிவு, கவியரங்கம் என பல களங்களிலும் முத்திரை பதித்துவரும் கவிக்கோ அப்துல் ரகுமான் இன்று 80-வது வயதில் அடியெடுத்து வைக்கிறார்.

தம் கவிதை பற்றிய கொள்கை அறிக்கை

https://www.tamilvu.org/courses/degree/p103/p1032/html/p1032512.htm

5.2 கவிதைகள்

அப்துல் ரகுமானின் முதல் கவிதைத் தொகுப்பு நூல் **பால்வீதி**. 1974-இல் வெளிவந்தது. பாலைச் சுண்டக் காய்ச்சித் திரட்டாகக் கட்டிப் படுத்தியது போன்று, சிந்தனையையும் கற்பனையையும் திரட்டி வடித்த புதுக்கவிதைகள் கொண்டது.

அடுத்து வெளிவந்தது. கவியரங்கங்களில் அவர் பல ஆண்டுகளாகப் படைத்த கவிதைகளுள் தெரிந்தெடுத்த சிலவற்றையும், இந்தி உருது இசைப்பாடல் வடிவங்களைத் தமிழில் அறிமுகப்படுத்திப் படைத்த பாடல்களையும் கொண்ட **நேயர் விருப்பம்**. இது 1978-இல் வெளிவந்தது. அதைத் தொடர்ந்து **சுட்டுவிரல்** (1989), **ஆலாபனை** (1995), **விதைபோல் விழுந்தவன்** (1998), **முத்தமிழின் முகவரி** (1998), **பித்தன்** (1998) ஆகிய புதுக்கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். 2002 - இல் வெளிவந்துள்ளது **மின்மினிகளால் ஒரு கடிதம்** என்னும் நூல். இது அரபி, உருது மொழிகளின் **கஸல்** என்னும் காதல் கவிதை வடிவத்தைத் தமிழில் அறிமுகம் செய்ய இவர் படைத்த அழகிய காதல் இலக்கியம்.

இக்கவிதை நூல்கள் மட்டுமின்றி இரு ஆராய்ச்சி நூல்கள், பத்துக்கும் மேற்பட்ட இலக்கியக் கட்டுரை நூல்கள், பிறமொழிக் கவிதைகளை மொழிபெயர்த்து விளக்கி எழுதிய பல கட்டுரைத் தொகுதிகள் என்று பல நூல்களைப் படைத்து வெளியிட்டுள்ளார். தொடர்ந்து எழுதி வருகின்றார்.

நண்பர்களே, ந.பிச்சமூர்த்தி, சிற்பி ஆகியோரின் கவிதைகள் பற்றிய பாடங்களை முன்பு படித்தீர்கள். அவற்றின்வழி புதுக்கவிதை பற்றி அறிந்திருக்கிறீர்கள்.

- **புதுக்கவிதை வடிவம்**

சிற்பியும் அப்துல் ரகுமானும் தமிழ் கற்றுப் புலமை பெற்ற பேராசிரியர்கள். இவர்களும் **மீரா, அபி, மேத்தா, தமிழன்பன், இன்குலாப்** போன்ற பிற தமிழ்ப் பேராசிரியர்களும் யாப்பு இலக்கணக் கட்டுப்பாட்டை மறுத்த புதுக்கவிதையை எழுதத் தொடங்கினர். இதன் பிறகுதான் 'இலக்கணத்தை மீறிக் கவிதை எழுதினால் தமிழ்மொழி அழிந்துவிடும்' என்ற தவறான எண்ணம் அகன்றது. புதுக்கவிதையைக் கடுமையாக எதிர்த்து வந்த பலர் அமைதி அடைந்தனர். கவிதையின் பரிணாம வளர்ச்சி என்று புதுக்கவிதையை ஏற்றுக் கொண்டனர். **விலங்குகள் இல்லாத கவிதை** என்ற அப்துல் ரகுமானின் கட்டுரை நூல் புதுக்கவிதை பற்றிய பல தவறான ஐயங்களைப் போக்கியது.

இக்கால வாழ்வியல் சூழல் ஏற்படுத்தும் உள்ள உணர்வுகளை, வாழ்க்கைச் சிக்கல்களைக் கவிஞன் சரியாக வெளியிடப் பொருத்தமான வடிவம் புதுக்கவிதைதான் என்பது அப்துல் ரகுமானின் நம்பிக்கை.

5.2.1 தம் கவிதை பற்றிய கொள்கை அறிக்கை

பாரதியார் 'நமக்குத் தொழில் கவிதை, நாட்டுக்கு உழைத்தல்' என்று கொள்கை அறிவிப்புச் செய்தார். தமக்குத் தொழிலே கவிதை படைப்பதுதான் என்பது அவர் கருத்து. அவர் வழியில் வந்த தமிழ்க்கவிஞர் அப்துல் ரகுமானோ, தமக்கு உயிரும் வாழ்க்கையுமே கவிதைதான்

என்கிறார். எழுதுகோலைத் (பேனா) தம் கையின் ஆறாவது விரலாகவே உணர்கிறார். 'இந்த ஆறாவது விரல் வழியே வடியும் இரத்தமும் சதையும்தாம் தம் எழுத்துகள்' என்று அவர் சொல்கிறார்.

என் ஆறாவது விரல் வழியே
சிலுவையிலிருந்து
வடிகிறது ரத்தம்
ஆம் -
என் 'மாம்சம்'
வார்த்தை ஆகிறது

அவரது முதல் நூலான **பால்வீதியின்** முதல் கவிதையே இவ்வாறு அவர் கவிதை பற்றிய கொள்கை அறிக்கையாக அமைகிறது.

நண்பர்களே, திருமறை பைபிளைப் படித்தவர் ஒவ்வொருவருக்கும் இக்கவிதை 'ஆதியாகமத்தில்' வரும் மனிதன் படைக்கப்பட்ட செய்திகளை நினைவூட்டும். ஆதியில் தேவனிடம் இருந்த 'வார்த்தை மாம்சம் ஆகியது' - அதாவது 'வார்த்தையால் தேவன் முதல் மனிதன் ஆதாமைப் படைத்தார்', என்பதே அச்செய்தி. அப்துல் ரகுமானின் கவிதையில் 'மாம்சம் வார்த்தை' ஆகிறது.

இந்தக் கவிதை நமக்கு எதை உணர்த்துகிறது?

1. சிலுவையில் ஏசுபெருமான் சிந்திய இரத்தம் மனித குலத்தைப் பாவ வழியிலிருந்து மீட்டது. அன்பு என்னும் தூய நெறியில் செலுத்தியது. உலகம் அடையும் வாழ்க்கைச் சிக்கல்களால் கணந்தோறும் சிந்தனைச் சிலுவையில் அறையப்படுகிற கவிஞனின் இரத்தமே அவன் கவிதை. இது மனித குலத்தை மீட்டு நல்வழியில் செலுத்தும்.

2. சிலுவையில் ஏசு சொன்ன வாக்கியம் 'என் தேவனே ! ஏன் என்னைக் கைவிட்டீர்?' என்பது, அப்துல் ரகுமான் அதை 'என் தேவனே ! எனக்குக் கைகொடுத்தீர்' என மாற்றி இக்கவிதைக்குத் தலைப்பாகக் கொடுத்துள்ளார். எழுதும் கையைக் கொடுத்ததற்கு நன்றி கூறுவதற்காகவே இந்த மாற்று உரை.

5.2.2 பாடுபொருள் வகைகள்

'மானிட முன்னேற்றம் தமது கவிதைகளின் குறிக்கோள்' என்ற அவரது படைப்பு நோக்கம் இன்று வரை அவர் எழுதியுள்ள கவிதைகள் அனைத்திலும் செயல்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

காதல், இயற்கை, அரசியல், சமூகம், அறிவியல், ஆன்மிகம் முதலிய வாழ்வியல் துறைகள் எதையுமே அவர் விட்டுவைக்கவில்லை. தெளிந்த

சிந்தனையுடனும், ஆழ்ந்த தூய உணர்வுடனும், இனிய அழகியலுடனும் கவிதைகளைப் படைத்து வழங்கி வருகிறார். சான்றாக ஒருசில கவிதைகளே இங்குத் தரப்படுகின்றன.

- **சமயம் - ஆன்மிகம்**

இறைவனுக்கு எத்தனையோ பெயர்கள் ! எல்லாப் பெயரும், ஒருவனான இறைவனையே குறிக்கின்றன என்று சமய ஒற்றுமை பேசுகிறார் அப்துல் ரகுமான்.

அரன் என்றழைப்பினும்
வரன் கொடுப்பவன்நீ
அரியென்று இசைப்பினும்
சரியென்று இசைப்பாய்
கர்த்தன் என்று உரைப்பினும்
அர்த்தம் நீதான்
அல்லா எனினும் நீ
அல்லாது வேறு யார்?
(ஆயிரம் திருநாமம்பாடி - நேயர்விருப்பம், ப.31)

(**அரன்** = சிவன்; **அரி** = திருமால்; **வரன்** = வரம்; **அல்லா** = இறைவன்)

- **இயற்கை**

இயற்கைப் பொருள்களை அப்படியே வருணனை செய்வதில்லை அப்துல் ரகுமான். அவற்றுக்குள்ளும் ஆழ்ந்த வாழ்வியல் உண்மைகளைக் காண்கிறார்.

சின்னஞ் சிறிய பனித்துளிகளையும் பெரிய சூரியனையும் ஒரு கவிதையில் நிறுத்திக் காட்சி படைக்கிறார். அது ஒரு புதிய காட்சி. நம் மனச்சாட்சியை உசுப்பும் **சாட்சி** என்ற கவிதை :

வெண்புள்ளி குத்திய
இரவு நீக்ரோவைப்
படுகொலை செய்கிறான்
வெள்ளையன்

தரையின்
பச்சை நாக்குகளில்
வார்த்தையாக முயலும்
ரத்தத் துளிகள் (சாட்சி, பால்வீதி, ப.74)

(**இரவு** = நீக்ரோவாகவும்; **சூரியன்** = வெள்ளையனாகவும்; **புல் இதழ்கள்** = பச்சை நாக்குகளாகவும்; **பனித்துளிகள்** = இரத்தத் துளிகளாகவும் உருவகப்

பொருளில் வந்தன; **வெண்புள்ளி குத்துதல்** = நட்சத்திரங்கள் மின்னுதல், இங்கு நீக்ரோக்களைப் புள்ளி குத்தி அவமானப்படுத்துதல்)

வெள்ளை இனத்தவரின் இனவெறிக் கொடுமைக்கு உள்ளாகும் நீக்ரோ மக்களின் மீது கவிஞர் கொண்ட பரிவு இந்த உருவகக் கவிதையாய் உருவாகியிருக்கிறது. உலகையெல்லாம் தன் உறவாகப் பார்க்கும் கவிஞருக்கு 'அந்த விடிகாலைப் பொழுது நீக்ரோக்களுக்கு எப்போது விடியும்?' என்ற தவிப்பு !

- **உழைப்பு**

உழைத்துச் சிவந்த கைகளைத் திருமகளின் இருப்பிடமான செந்தாமரையாகக் காண்கிறார். தனரேகை, கையில் இல்லை, தரிசுகளில் ஏர்முனை கீறும் கோடுகள் தாம் தனரேகை என்கிறார். (நகமகுடம், நேயர் விருப்பம், ப.42)

மணி வயிரத் தோள்என்ற
மந்தரங்கள் இங்கிருக்கத்
தயக்கமென்ன அமுது எடுக்கத்
தரைக்கடலையே கடைவோம் !

(**மந்தரம்** = பாற்கடலைக் கடையப் பயன்பட்ட மந்தர மலை; **தரைக்கடல்** = தரையாகிய கடல்)

வயிரம் பாய்ந்த தோள்கள் என்னும் மந்தர மலையைக் கொண்டு, பூமியாகிய பாற்கடலில் உழைத்து, மானிடம் சாகா இருப்பதற்குரிய அமுதாகிய அனைத்துப் பயன்களையும் அடைவோம் என்பது பொருள்.

- **சமூக உணர்வு**

காற்றைப் பாடும்போது, சமூகத்தில் சாதியின் பெயரால் வளர்ந்து நிற்கும் கொடிய நோயான தீண்டாமையைக் கண்டிக்கிறார்.

கை இல்லாத நீ
எல்லாரையும் தழுவுகிறாய்
கை இருக்கும் நாம்
சக மனிதனிடமே
தீண்டாமையைக்
கடைப்பிடிக்கிறோம்
கையிருப்பது ஒரு குறையோ?
(அந்த இடம், ஆலாபனை)

கைகள் இல்லாத காற்று எல்லாரையும் தழுவுகிறது. கையிருக்கும் மனிதன் தன் உடன்பிறப்பான இன்னொரு மனிதனை இழிந்த சாதி âன்று

தீண்ட மறுக்கிறான். இதைச் சொல்லும் கவிஞர் “கையிருப்பது ஒரு குறையோ?” என்று கேட்கிறார்.

சுட்டுவிரல் என்னும் நூலில் சமுதாயச் சீரழிவுகளுக்குக் காரணமானவர்கள் அனைவரையும் குற்றம் சாட்டுகிறார். சினம் கொண்டு சாடுகிறார். அதில் அப்துல் ரகுமானின் ‘கவிக்கோபம்’ பொங்குகிறது. கோபம் கூட மிக அழகாக இருக்கிறது.

- **இசை**

கவிஞர் மெழுகு வத்தியைக் கூர்மையாகப் பார்த்திருக்கிறார். நமக்காக அழுது உருகும் அதன் தோற்றத்தில் ஒரு புதிய கற்பனை பிறக்கிறது :

ஒற்றை நெருப்பு உதட்டின்
வாசிப்பில்
புல்லாங்குழலே
***உருகுகிறது** (பால்வீதி. ப . 51)*

மெழுகு வத்தியின் சுடர் ஒற்றை உதடாகத் தெரிகிறது. மெழுகுவத்தி புல்லாங்குழலாகத் தோன்றுகிறது. வெளிச்சம் இசையைப்போல் பரவுகிறது. நமக்கு இன்பம் தருகிறது. அந்த இசையின் இனிமையில் புல்லாங்குழலே உருகிக் கரைகிறது. ஒளியையும் ஒலியையும் ஒன்றிணைத்து இசைக்கு ஒரு புதிய அடையாளத்தை உருவாக்குகிறார் கவிஞர்.

ஆலாபனை நூல் முழுக்க வாழ்வின் சிறந்த அம்சங்களை, அழகை எடுத்துக் காட்டி, அவருக்குள் இருக்கும் பாடகன் பாடுகிறான். ஆலாபனை : ராக விரிவை இசைக்கலைஞர் இசைக்கும் முறை. வாழ்வையே இசை ஆலாபனையாக உணர்ந்து ரசிக்கும் ரசிகனை இங்குக் காணலாம்.

- **காதல்**

உலகக் கவிஞர்களில் காதலைப் பாடாதவர் எவரும் இல்லை. காதலர் பிரிந்து இருக்கும் போது தோன்றும் துயரத்தில்தான் காதலின் உயிர்த் துடிப்பே இருக்கிறது. அந்தப் பிரிவும் ஏக்கமும்தாம் காதலை வளர்க்கும் ஊட்டச் சத்து; கண்ணீர்தான் காதலை வாடாமல் வாழவைக்கும் ஊற்று நீர். அப்துல் ரகுமானின் காதல் கவிதைகள் எல்லாம் இந்தப் பிரிவையும் ஏக்கத்தையும் துன்பத்தையுமே பாடுகின்றன. பலநூறு கவிதைகள் படைத்தும் நிறைவு அடையாமல் ஒரு தனி நூலே படைத்திருக்கிறார். அதுதான் **மின்மினிகளால் ஒரு கடிதம்**. தான் பாடுவதற்கே காதலியின் நினைவுதான் காரணம் என்று சொல்கிறார் :

கற்களில் இடறும்போது
பாடும் நதியைப்போல

உன் நினைவுகள் இடறும்போது
நான் பாடுகிறேன்
(மின்மினிகளால் ஒரு கடிதம், ப. 69)

(**இடறுதல்** = மோதிக்கொள்ளுதல்)

- **உண்மை அழகு**

உலகத்தில் நாம் 'உயர்ந்தவை அல்ல' என்று கருதும் பல பொருள்களிலும் சிறந்த அம்சங்கள் இருப்பதை இவருக்குள் இருக்கும் பித்தன் பாடுகிறான். **பித்தன்** நூல் முழுதும் இந்த முரண் அழகைப் பாடுகிறது.

தேவகானம்

கவிக்கோ அப்துல் ரகுமான்

கிரி ராமசுப்ரமணியன்

https://www.commonfolks.in/bookreviews/devagaanam-kavikko-abdul-rahman

கனியும் நீ படைத்தனை
கையும் நீ கொடுத்தனை
கனியை நான் பறிக்கவும்
கைய சைக்கச் செய்தனை
கனியில் உள்ள சுவையும்நீ
கனியை உண்ட மகிழ்வும்நீ
கனியையா சுவைத்தனன்?
கனியுனைச் சுவைத்தனன்

துவங்கும் முன்னதாகவே.....

1) *சமீபத்தில் நான் வாசித்தவைகளுள் மிகச்சிறந்த புத்தகம் என்று இந்தப் புத்தகத்தைக் குறித்து உரக்கச் சொல்லுவேன்.*

2) *நல்ல கவிதைகளின் அபிமானிகள் ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டிய புத்தகம் இது என்றும் பரிந்துரைப்பேன்.*

3) மரபுக் கவிதைகளைப் பரிச்சயம் செய்ய விரும்புவோர் முயற்சி செய்ய வேண்டிய முக்கியப் புத்தகம் இது என்றும் சொல்லுவேன்.

4) இறைவன் இருக்கிறான்; அவன் ஒருவனே என்று நம்புபவர் நீங்கள் என்றால் இந்த புத்தக மதிப்புரை எல்லாம் உங்களுக்கு வேண்டாம். நேரடியாக நான் கீழே கொடுத்துள்ள சுட்டியைத் தட்டிப் புத்தகத்தை வாங்கிப் படிக்கத் துவங்கி விடுங்கள்.

பக்கத்திற்கு இரண்டு கானங்கள் என நூற்று எண்பது பக்கங்களுக்குத் திகட்டத் திகட்டத் தித்திக்கும் கவிதைகள்.

தேவனைப் பற்றிய கானங்கள் என நமக்குக் கிடைக்கும் இவை தனக்கு தேவனால் உணர்த்தப்பட்ட கானங்கள் என்கிறார் கவிக்கோ.

ஒருவர் ஒவ்வொரு புத்தகம் வாங்குவதற்கும் பின்னாலேயே கூட ஒரு கதை இருக்கிறது என்று என் முந்தைய விமர்சனப் பதிவில் சொல்லியிருந்தேன். புத்தகம் வாங்கவே கதை உண்டு என்றால், புத்தகம் எழுதிட ஒரு சரித்திரமே இருக்கும் அல்லவா?

இந்தப் புத்தகம் எழுத ஏற்பட்ட உந்துதலை கவிக்கோ இப்படிச் சொல்லுகிறார்.

" சந்தையில் சாமான்கள் வாங்கி கொண்டிருந்த காலத்திலேயே எங்கிருந்தோ ஒரு புல்லாங்குழல் இசை என்னை அழைத்துக் கொண்டே இருந்தது.சந்தையும் சாமான்களும் தேவைப்படாத காலம் வந்ததும் அந்தப் புல்லாங்குழல் இசை உரத்து ஒலித்தது. அதன் ஈர்ப்பைத் தவிர்க்க முடியாமல் நான் அந்த இசையின் மூலம் நோக்கிப் பயணம் புறப்பட்டேன்."

இப்படித்தான் துவங்குகிறது இந்தப் புத்தகத்தின் சரித்திரம். இந்தப் புத்தகம் உருவாகினதற்கான தேவை.

ஒரு மாம்பழத்தைச் சுவைத்து முடித்தவனிடம், "என்னய்யா, பழம் எப்படி இருந்துச்சி?", என்று கேட்டால் என்ன சொல்லுவேன்?

"நல்லா இனிப்புங்க"

"மாம்பழம்ன்னாலே இனிப்புதானய்யா. அதென்ன புதுசா. பழம் எப்படி இருந்துச்சி. அத்தைச் சொல்லு"

"நல்லாதாங்க இருந்துச்சி"

"நல்லா"ன்னா எப்படிய்யா, அதைக் கொஞ்சம் விளக்கிச் சொல்லேன்", என்று கேட்டால் எப்படி ஒரு மாம்பழத்தின் சுவையை விவரிப்பேன்?

மல்கோவாவும், நீலம் மாம்பழமும் ஒன்றேவா? பூவனும் பேயனும் வெவ்வேறா?

இப்படித்தான் இந்தப் புத்தகம் முழுக்க விதம் விதமான மா, பலா, வாழை என சுவைக்கச் சுவைக்க வகைவகையாய் ஒவ்வொரு பக்கத்திலும் இருந்து தேஞ்சுவையூறும் பாக்கள்; தேவகானங்கள்.

சம்பவாமி யுகே யுகே என்று பகவத் கீதையில் சொல்லும் கிருஷ்ண பரமாத்மா யுகத்திற்கு ஒருக்கா புல்டோசர் எதனையேனும் கொண்டு வந்து லோகத்தைச் சமன் செய்து விட்டுப் போனால் என்ன, வருடாவருடம் சென்னையில் டிசம்பர் மாதத்தில் மட்டும் இப்படி என்னத்திற்காய்ப் படுத்தியெடுக்கிறான். என்று யோசிப்பவனுக்கு...

அல்லவை தினம்தினம்
அதிக மாகிப் பூமியில்
நல்லவை குறைந்து ஞாலம்
நலிவுறும் பொழுதெலாம்
வல்லவன் பிறப்பெடுத்து
வருவதில்லை நேரிலே
வெல்லுகின்ற இயற்கையின்
விதிஅதைச் செய்யுமே

...என்கிறார் கவிக்கோ.

அன்பு செய்தல், கடவுள் மீதான காதல், அவனை எல்லாவற்றிலும் காணும் முயற்சி, அருளைத் தா தா என்னும் இறைஞ்சுதல், தான் பெற்றவைகளுக்கு நன்றி நவிலல், ஏற்றத் தாழ்வுகள் குறித்த கேள்விகள், கொடைத்தன்மையின் சிறப்பு என்று பலப்பல தலைப்புகளில் அழகான தமிழில், மரபுக்கவிதை வடிவில் முந்நூற்று சொச்ச கவிதைகள்.

காணும் கண்கள் தந்த உன்னைக்
காணு கின்ற ஆசையால்
காணும் காட்சி யாவி லும்.. என்
கண்களால் துளாவினேன்
காணும் காட்சி நானடா

காணும் கண்ணும் நானடா
காணும் பார்வை வந்திடின்
காண்பை எங்கும் நீயென்றான்

கடவுள் மறுப்புப் பேசுவோருக்கு அருகினில் உலாவி வந்தவர்தாம் கவிக்கோ. அவர்களையும் அங்கங்கே ஒரு பிடி பிடிக்கிறார்.

அறிவெனும் விளக்கொளிக்கு
ஆண்டவன் அகப்படான்
அறிவை நீ அணைத்திடின்
அவனைக் காண லாகுமே

அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தது இயங்கும் படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே என்கிறார் குலசேகர ஆழ்வார். திருவேங்கட மலையில் மலராகவோ, மரமாகவோ, உன் கோயிற்கதவாகவோ இல்லை உன் அடியார்கள் மேலேறி நடக்கும் படிக்கல்லாகவோ ஆகியுன்னை அனுதினம் கண்டு உய்வேன் என்கிறார் பெருமாள் திருமொழியில் குலசேகரர்.

செதுக்கி வைத்த கல்லாவதனினும், ஒதுக்கி வைத்த கல்லாய்க் கிடைக்க நினைக்கும் குலசேகரரின் இந்தப் பாடல் எனக்கு எப்போதும் ஓர் வியப்பே.

இந்தக் கருத்தின் இன்னொரு முகத்தை....

துதிக்கும் தெய்வம் எங்குமே
தோன்றுவான் எனில்க ழித்து
ஒதுக்கி வைத்த கல்லிலும்
இருப்பன் அன்றோ ஈசனே

...என்கிறார் கவிக்கோ.

மரபுக் கவிதைகள்தாம் எனினும் நிரம்பவும் சிக்கலான வார்த்தைகள் கொண்டெல்லாம் கவிதைகளைப் புனையவில்லை கவிக்கோ என்பதனால் நல்ல தமிழ் வாசிக்கத் தெரிந்த எவரும் வாங்கி வாசிக்கும் வண்ணம் உள்ள புத்தகம்.

(நன்றி: ஆம்னி பஸ்)

காணொளிகள்

01] **மனைவியிடம் எதையும் மறைக்ககூடாது! - கவிக்கோ அப்துல் ரகுமான் பேச்சு**
https://www.youtube.com/watch?v=3lgUvNoTZCc [29:17]

02] **புத்தகம் -கவிக்கோ அப்துல் ரகுமான்**
https://www.youtube.com/watch?v=Blm2iF_aiMI [17:26]

03] **தொலைந்து போனவர்கள் -கவிக்கோ அப்துல் ரகுமான்- கவிதை**
https://www.youtube.com/watch?v=y2-c7DY2hNw [8:34]

04] **Lingusamy | Brindha Sarathy | கவிக்கோ அப்துல் ரகுமான் நினைவு ஹைக்கூ கவிதைப் போட்டி - 2022**
https://www.youtube.com/watch?v=ZNiAkH0Bhkc[50:50]

கவிக்கோ அப்துல் ரகுமான் நினைவு ஹைக்கூ கவிதைப் போட்டி -2022

பரிசு வழங்குதல், தேர்வு செய்யப்பட்ட கவிதைகள் நூல் வெளியீட்டு விழா

வரவேற்புரை :
பிருந்தா சாரதி

தலைமை - விழாப் பேருரை
எஸ். ராமகிருஷ்ணன்
'கவிக்கோவும் ஹைக்கூவும்'

நூல் வெளியீடு - பரிசு வழங்குதல் - சிறப்புரை
கனிமொழி M.P.

விழா நோக்க உரை
என்.லிங்குசாமி

தேர்வும் - பரிசும் குறித்து
ஜெயபாஸ்கரன்

நூல் மதிப்புரை
விவேகா

வாழ்த்துரை :

இராம. குருநாதன்

ஆர். சிவக்குமார், விஷ்ணு அசோசியேட்

நன்றியுரை :

மு.வேடியப்பன்
டிஸ்கவரி புக் பேலஸ்

05] **முதுமை | அப்துல் ரகுமான்**
https://www.youtube.com/watch?v=1aOGB_beCDw[19:59]

கவிக்கோ அப்துல் ரகுமான் (1937-2017) நவீனத் தமிழ்ப் புதுக்கவிதை உலகில் படிமங்கள், குறியீடுகள் மற்றும் புதிய உவமைகள் மூலம் புரட்சி செய்தவர். "பால்வீதி" முதல் "ஆலாபனை" (சாகித்ய அகாடமி விருது பெற்ற நூல்) வரை பல சிறப்பான கவிதைத் தொகுப்புகளை வழங்கியுள்ளார். வானம்பாடி இயக்கத்தின் முக்கியக் கவிஞரான அவர், காதல், சமூகம், தத்துவம் மற்றும் மானுட உணர்வுகளைப் பாடுவதில் வல்லவர்.

அப்துல் ரகுமானின் கவிதைச் சிறப்புகள்:

- **முக்கியப் படைப்புகள்:** பால்வீதி (1974), நேயர் விருப்பம் (1978), சுட்டுவிரல் (1989), ஆலாபனை (1995), பித்தன்.
- **புதுமை:** மரபுக் கவிதையின் சுவை மாறாமல், புதுக்கவிதையில் படிமங்களையும் கசல்களையும் (Ghazal) கையாண்டார்.
- **கருப்பொருள்:** கவிக்கோவின் கவிதைகள் பெரும்பாலும் தத்துவார்த்தமான சிந்தனைகளையும், ஆழ்ந்த காதல் உணர்வுகளையும், சமூக அவலங்களைச் சாடும் விதத்திலும் இருக்கும்.

பிரபலமான கவிதை வரிகள் (மாதிரி):

1. **ஆலாபனை (கண்ணீரின் ரகசியம்):**
   "இறைவா எனக்குப் புன்னகைகளைக் கொடு" என்று பிரார்த்தித்தேன். அவன் கண்ணீரைத் தந்தான். "வரம் கேட்டேன். சாபம் கொடுத்து விட்டாயே" என்றேன். இறைவன் கூறினான்: மழை வேண்டாம். விளைச்சலை மட்டும் கொடு என்று.
2. **காதல்/தத்துவம்:**

காதல் கவிதைகளைக் கப்பல் செய்து கண்ணீரில் விட்டுவிட்டேன்.

என்னுயிரோ உன்னிடத்தில், உன்னுயிரோ என்னிடத்தில்; மரணம் என்ன செய்யும்?.

3. **சமூகம்/பித்தன்:**

"நட்சத்திர ஆட்சி, இனி இந்த நாடு தாங்காது.". புத்தகங்களே சமர்த்தாய் இருங்கள். குழந்தைகளைக் கிழித்துவிடாதீர்கள்.

அப்துல் ரகுமானின் கவிதைகள் கற்பனை நயங்கள், சொல்லாட்சி, மற்றும் புதிய உவமைகளால் வாசகர்களை ஈர்க்கும் தன்மை கொண்டவை.

"தவறான எண்"

அப்துல் ரஹ்மான்

---

https://kuvikam.com/2023/05/16/%E0%AE%A4%E0%AE%B5%E0%AE%B1%E0%AE%BE%E0%AE%A9-%E0%AE%8E%E0%AE%A3%E0%AF%8D-%E0%AE%85%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%81%E0%AE%B2%E0%AF%8D-%E0%AE%B0%E0%AE%B9%E0%AF%8D%E0%AE%AE%E0%AE%BE/

கவிஞர் அப்துல் ரகுமான் எழுதிய "ஆலாபனை" கவிதை தொகுப்பில் "தவறான எண்" என்றொரு கவிதை

"தவறான எண்"

தற்செயலாய் ஒருநாள் தொலைபேசியில்

தவறான எண்ணில் சிக்கினான்

இறைவன்

"என்ன ஆச்சரியம்! இறைவனா?

நீ தேடினால் கிடைப்பதில்லை

இப்படித்தான் எதிர்பாராத வகையில்

சிக்கிக் கொள்கிறாய்

தொலைபேசியை வைத்துவிடாதே

பல நாட்களாகவே

என் இதயத்தைக் குடையும்

சில கேள்விகளை

உன்னிடம் கேட்க வேண்டும்" என்றேன்

கண்ணீரைப் போல்

கேள்விகள் பொங்கி கொண்டு வந்தன

எங்கள் காரியங்களில் குற்றம் பிடிப்பவனே!

எந்த சபிக்கப்பட்ட மண்ணால் எங்களை படைத்தாய்?

ஏதேன் தோட்டத்தில் விலக்கப்பட்ட கனியை ஏன் வைத்தாய்?

உனக்கே பணிய மறுத்த சாத்தானை பலவீனமான எங்களின் எதிரியாக ஏன் ஆக்கினாய்?

அந்த பிரளயப் பொழுதில் தன் பேழையில் சேமிக்க நல்ல மனிதர்களைத் தேர்ந்தெடுத்ததில் நோவா தவறு செய்துவிட்டாரா?

இங்கே என்ன நடக்கிறது என்று பார்!

இதோ! உனக்கு வீடு கட்டுவதற்காகவே உன் வீட்டை இடிக்கும் மூடர்கள்!

இடிக்கப்படுவதில் நீ இடிக்கப்படுகிறாயா? கட்டப்படுவதில் நீ கட்டப்படுகிறாயா?

இந்த ராம் யார்? ரஹூம் யார்?

பெயரில் என்ன இருக்கிறது என்றவன் பேதை பெயரால் அல்லவா இத்தனை பிரச்சனைகள்?

பெயர்களில் நீ இருக்கிறாயா?

நீ அன்பு என்றால் இந்தப் பகை யார்?

நீ சாந்தி என்றால் இந்த வெறி யார்?

நீ ஆனந்தம் என்றால் இந்த துயரம் யார்?

நீ சுந்தரம் என்றால் இந்த அசிங்கம் யார்?

நீ உண்மை என்றால் இந்தப் பொய் யார்?

நீ ஒளி என்றால் இந்த இருள் யார்?

எரியும் வீடுகள் உன் தீபாராதனையா?

கொப்பூழ்க் கொடிப் பூக்கள் உனக்கு அர்ச்சனையா?

ரத்தம் உன் அபிஷேகமா?

இது எந்த மதம்? எந்த வேதம்?

இவர்களா உன் பக்தர்கள்?

தீமை அதிகரிக்கும் போதெல்லாம் அவதரிப்பேன் என்றாயே ?

இதை விடக் கொடிய காலம் ஏது?

எங்கே காணோம் உன் அவதாரம்?

இன்னும் எதற்காகப் பூக்களை உண்டாக்குகிறாய்?

இன்னும் எந்த நம்பிக்கையில் குழந்தைகளை அனுப்பிக் கொண்டிருக்கிறாய்?

ஆலய மணி ஓசையும் மசூதியின் அழைப்பொலியும்

காற்றில் கரைந்து சங்கமிக்கும் அர்த்தம் இவர்களுக்கு எப்போது விளங்கும்?

கடைசியாகக் கேட்கிறேன்

நீ ஹிந்துவா? முஸ்லிமா?

"ராங் நம்பர்" என்ற பதிலோடு இணைப்பு துண்டிக்கப்பட்டது.

அப்துல் ரகுமான் கவிதைகளில்

படிமமும் குறியீடும்

-முனைவர் இரா. தேவேந்திரன்

https://www.vallamai.com/?p=81969

முன்னுரை:

தமிழ் இலக்கியத்துறையில் திறனாய்வு இன்று குறிப்பிடத்தக்கதாக விளங்குகிறது. இலக்கிய வடிவம், இலக்கியப் பொருள், பொருளை வடிவ மாக்குவதில் படைப்பாளன் பயன்படுத்தும் இலக்கிய உத்திகள், இலக்கியப் பொருளில் அமைந்துள்ள அணுகுமுறை போன்றவை திறனாய்வுத் துறையில் அதிகம் பேசப்படுகின்றன. படைப்பாளன் பயன்படுத்தும் இலக்கிய உத்தி அழகூட்டுவதற்காகவும் பொருள் புலப்பாட்டிற்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இத்தகைய உத்திகளுள் குறியீடும் படிமமும் குறிப்பிடத்தக்கதாகும்,

தமிழில் படிமமும் குறியீடும்:

இமேஜ்(image) என்னும் ஆங்கிலமொழிச் சொல்லிற்கு இணையாகத் தமிழில் இன்று வழங்கப்பெற்று வரும் ஒரு கலைச்சொல்லே படிமம் என்பதாகும். படிமம் என்பதற்கு உருக்காட்சி, உருவம், உருமாதிரி, ஒத்தவடிவம், கருத்துரு, கண்ணாடியில் தோன்றும் பிம்பம் போன்ற பொருள்களில் கையாளப்படுகின்றது. அறிவு நிலையிலும் உணர்வு நிலையிலும் எளிதில் விளக்க இயலாதவற்றை நொடியில் தெளிவாக்கி நம்முன் நிறுத்த வல்லதே படிமம் என்று எஸ்ராபவுண்ட் விளக்குவார். மேலும், குறிப்பிடுகின்றபோது ஏராளமான கவிதைகளைப் படைப்பதைவிடச் சிறந்தது தன் வாழ்நாளில் ஒரே ஒரு படிமத்தைப் படைப்பதாகும் என்று படிமத்தின் சிறப்பினை குறிப்பிடுவார். படிமம் என்பது உணர்வும் அறிவுச் சேமிப்பும் இணைந்து உருவாக்கும் மனக்காட்சியாகும். இதில் மனக்காட்சியின் விரிவு குறிப்பிடத்தக்கது. படைப்போன் படிப்போன் திறனுக்கேற்பப் படிமம் பல படிநிலைகளைக் கொண்டது.

குறியீடு என்பது சின்னம், அடையாளம் என்ற பொருட்களில் தமிழில் வழங்கப்பட்டு வருகின்றது. மனித வாழ்வில் இணைந்து கிடக்கும் கணக்கற்ற குறிகள்(Signs) பற்றிச் சமூகவியலார் இன்று மிகவிரிவாகப் பேசி வருகின்றனர். மனிதரின் தோற்ற ஒப்பனையில் பல அடையாளக் குறிகள் சாதி, சமயம், பண்பாட்டின் பல படிநிலைகள், சமூக அமைப்பின் பல நிலைகள் எனப் பல்வேறு அர்த்தங்களை இனம் காட்டும் ஆயிரமாயிரம் குறிகள் வாழ்வில் கலந்திருக்கின்றன. "குறிகள் பலவகைப்பட்டதாகத் தோன்றினும் அவற்றின் சிறப்பியல்புகளைக் கொண்டு, அமெரிக்கத் தத்துவ அறிஞர் சார்லஸ் சாண்டர்பீர்ஸ் அவற்றை மூன்று வகைகளாக அடக்குதலை ந. ம. வீ. ரவி குறிப்பிடுகின்றார். அவை, 1. உருவக்குறி(iconic signs), 2. சுட்டுக்குறி (indexical signs), 3. குறியீடு (symbolic signs) என்பனவாகும்" (குறியியலும் அரங்கக் குறியியலும், 1992, ப. 12) இம்மூவகைகளுள் ஒன்றே இலக்கியத்துறை தொடர்பான குறியீட்டையும் குறிப்பிடுகின்றது.

குறியீடு என்பது ஒரு பொருளுக்குப் பதிலாக மற்றொரு பொருளைப் பதிலியாகக் காட்டுவதாகும். படிமத்தைப் போலவே குறியீட்டையும் ஓர் இலக்கியமாக மேலை நாடுகளில் பின்பற்றினர். மேலை நாட்டாரின் திறனாய்வுக் கொள்கைகள் தமிழறிஞர்களுக்கு அறிமுகமானபின்,

Symbolism, Imagism என்று அவர்கள் குறித்த கலைச்சொற்களுக்கு இணையாகக் குறியீட்டியல், படிமவியல் என்னும் சொற்கள் தமிழில் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழிலக்கிய வரலாற்றில் படிமமும், குறியீடும் சங்க காலத்திலேயே மேலோங்கி விளங்கின. சங்க இலக்கியத்தில் காணப்படும் உள்ளுறை, இறைச்சி என்னும் குறிப்புப்பொருள் அடங்கிய இலக்கிய நயங்கள் இன்றைய படிமம் குறியீடு இவற்றின் முன்னோடியாகக் காணப்படுகின்றது. சங்க காலத்திற்குப் பின் தற்காலத்தில் இவை பெரிதும் பேசப்படும் இலக்கிய உத்தியாக படைப்பாளர்களால் போற்றப்படுகிறது. இதனை அப்துல்ரகுமான் "சங்க காலத்திலும், சித்தர்கள் காலத்திலும் இலக்கிய உத்தியாகப் பயன்பட்ட குறியீடு மீண்டும் புதுக்கவிதைக் காலத்தில் தான் இலக்கிய உத்தியாகப் பயன்படுகின்றது. புதுக்கவிதையில் அது வெறும் உத்தியாக மட்டுமின்றி அதன் சிறப்பு பண்பாகவே மாறிவிட்டது என்று குறிப்பிடுகின்றார்."(புதுக்கவிதையில் குறியீடு, 1990, ப. 183) புதுக்கவிதைகளில் பலவகையான உத்திகள் காணப்படுகின்றன. அவை, படிமம் (image), குறியீடு (symbol), அங்கதம் (satire), முரண் (parody), இருண்மை (obscurity), தொன்மம் (myth) போன்றவைகளாகும். இவ்வுத்திகளில் படிமம், குறியீடுகளைக் கவிக்கோ அப்துல் ரகுமான் தம் படைப்புகளில் பதிவு செய்துள்ளப் பாங்கினை இக்கட்டுரை ஆராய்கிறது.

படிமம்:

உணர்ச்சியுடைய சொற்சித்திரமாய் காணப்படும் படிமத்தைக் கவிக்கோ அப்துல்ரகுமான் சிறப்பாகக் கையாண்டுள்ளார். "தேவையற்ற எந்த ஒரு சொல்லையும் நீக்கிவிடுதல் என்னும் படிமவியலார் கொள்கைக்கு மிகப் பொருத்தமான கவிதைகளை எழுதுபவர் கவிக்கோ அப்துல்ரகுமான் என்பர்." (க. இராமச்சந்திரன், புதுக்கவிதைகளில் பன்முகப் பார்வை, ப. 82) அவரது 'பால்வீதி' என்கிற கவிதைத் தொகுப்பு படிமக் கவிதைகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

"இரவெல்லாம் / உன் நினைவுகள் / கொசுக்கள்" (பால்வீதி)

என்னும் கவிதையில் நினைவுகள் கொசுக்களாகப் படிமமாக்கப் பட்டுள்ளன. நினைவுக் கொசுக்களின் தொல்லையினால் இரவெல்லாம் தூக்கமின்றி வேதனைப்படும் மனிதனை நம்கண்முன்னே நிறுத்துகின்றார். அறிவு நிலையிலும் உணர்வு

நிலையிலும் எளிதில் விடுவிக்க இயலாத மனவேதனையை இப்படிமக் கவிதைத் தருகின்றது.

"என் ஆறாவது விரல்வழியே
சிலுவையிலிருந்து
வடிகிறது ரத்தம் – ஆம்
என் மாம்சம்
வார்த்தை ஆகிறது"

என்னும் பால்வீதியில் அமைந்த இக்கவிதை ஆதியிலே தேவனிடத்திலிருந்து வார்த்தை மாம்சமாகி இயேசு வடிவில் வந்ததாகவும் பின்னர் இயேசு சிலுவையில் அறையப்பட்டதாகவும் கூறும் விவிலியத்தின் கருத்தினை கவிக்கோ படிமமாக்கியுள்ளார். அப்துல் ரகுமான் 'வியட்நாம்' என்ற தலைப்பில் எழுதிய கவிதையில்,

"அக்கம் பக்கம் / வசந்தமில்லை
சோகத்தோடு / அமர்ந்திருக்கிறது
சவத்தின் மீதொரு / வண்ணத்துப் பூச்சி"

(வானம்பாடி – 9) எனப் போரின் உச்சத்தைப் படிமத்தின் வாயிலாகப் பதிவு செய்கின்றார்.

"வான உற்சவத்தின் / வாண வேடிக்கை
முகிற்புற்று கக்கும் / நெருப்பு பாம்புகள்
கருப்பு உதட்டின் / வெளிச்ச உதறல்
இடிச்சொற்பொழிவின் / சுருக்கெழுத்து" (பால்வீதி)

என்ற இக்கவிதையில் வானத்தைக் கீறிப்பாய்கிற ராக்கெட்டுகளாக மின்னலையும், மேகத்திலிருந்து வெளிவருகின்ற நெருப்பினை புற்றிலிருந்து சாட்டையாக வெளிவருகின்ற பாம்பாகவும் நீண்ட இடியோசைக்கு மத்தியில் சட்டெனத் தோன்றி மறைவதால் அதனைச் சுருக்கெழுத்தாகவும் காட்சிப்படுத்துகின்றார்.

"பாரதம் என்றால் பதவிச் சண்டைதானே! இந்த
நாட்டுக்குப் பொருத்தமாகத் தான் பெயர்
சூட்டியிருக்கிறார்கள்
அந்தப் பாரதத்தில் நான் செய்த வேலையை
இந்தப் பாரதத்தில் நீங்கள் செய்கிறீர்கள்" (சுட்டு விரல்)

புதிய பாரதம் என்ற இக்கவிதையில் சகுனியின் கூற்றாக அரசியலில் சூதாட்டத்தை முதலில் அறிமுகப்படுத்தியவன் நான்தான் ஆனால் நீங்களோ அரசியலையே சூதாட்டமாக மாற்றி விட்டீர்களே! நான் அன்று பகடைக் காய்களைத்தான் உருட்டினேன் நீங்களோ மக்களையே உருட்டுகிறீர்கள்

என்றவாறு தற்கால நிகழ்வை பாரத காலத்தோடு படிமமாக்குகிறார்.

அப்துல் ரகுமான் வாழ்வின் பயணத்தைப் பறவையின் பாதையோடு ஒப்பிட்டு,

"நதியின் பாதையைப் போல்
உங்கள் பாதை
உங்கள் பயணத்தால்
உண்டாகட்டும்
பறவையின் பாதையைப்போல்
உங்கள் பாதை
சுவடற்றதாக இருக்கட்டும்" (பித்தன், ப. 46)

என்ற கவிதையில் குறிப்பிடுகின்றார். நதியின் நீரோட்டம் திட்டமிட்டு அமைவதில்லை. தான் விரும்பியவாறு செல்லும். பறவையின் பாதை சுவடற்றதாக அமைந்து காணப்படும். இவை இரண்டையும் மனித வாழ்வோடு படிமமாக்கி முன்னேற்றத்தின் வழியைக் காட்டுகின்றார்.

குறியீடு:

படிமத்தைப் போன்று குறியீட்டையும் தற்காலப் படைப்பாளர்கள் சிறப்பாக கையாண்டுள்ளனர். குறி என்பது ஒரு பொருளைச் சுட்டிக் காட்டுகின்றது. குறியீடோ ஒரு பொருளுக்காகத் தானே அதனிடத்தில் நிற்பது என்ற குறியீட்டாளர்களின் சிந்தனைக்கு ஏற்பக் கவிக்கோ அப்துல் ரகுமான் படைப்புக்களும் காணப்படுகின்றது.

"புறத்திணைச் சுயம் வரமண்டபத்தில்
போலி நளன்களின் கூட்டம்
கையில் மாலையுடன்
குருட்டுத் தமயந்தி" – பால்வீதி

'ஐந்தாண்டாக்கு ஒருமுறை' என்னும் இக்கவிதை தேர்தலை விமர்சிக்கின்றது. இதில் வேட்பாளர்கள் போலி நளன்களாகவும், மாலை வாக்குச் சிட்டாகவும், குருட்டுத் தமயந்தி அறியாமை என்னும் இருளில் கிடக்கும் வாக்காளனாகவும, சுயம்வரம் ஒரு தேர்தல் திருவிழாவாகவும் புலப்படுத்திக் கவிஞரின் எண்ணத்தை வெளிப்படுத்துகின்றன. சுயம்வரக்காட்சியும், தேர்தல் காட்சியும் சேர்ந்து குறியீட்டுத் தன்மையை புராணக் கதையிலிருந்து உணர்த்துகின்றது.

"விற்க எதுவும் இல்லாததால்
கண்ணகிகளைப் பேரம்பேசும்
கோவலர்கள்" (பால்வீதி)

"உதயகுமாரர்களுக்குத்
தங்கள் உடல்களையே
அட்சய பாத்திரமாக்கித்
தம் வயிற்றுப் பசியைத்
தணித்துக் கொள்ளும்
மணிமேகலைகள்"

என்பதான கவிதைகளில் இன்றைய சமூக அவலங்களைச் சுட்டுகின்றார். கண்ணகி, கோவலன், உதயகுமாரன், மணிமேகலை போன்ற பழங்கதை மாந்தர் இன்றைய நடைமுறை மாந்தர்களுக்கு குறியீடுகளாக காட்டப்படுகின்றனர்.

அப்துல் ரகுமானின் 'மூடிய இமை' என்கிற கவிதையில் குறியீடுகள் முரணாக வந்து கருத்தை வெளிப்படுத்துக்கின்றன.

"என்னைக் கண்டதும்
கவிழும் உன் இமைகள்
கொசுவலையா?
மீன் வலையா? (பால்வீதி)

கவிஞர் இக்கவிதையில் ஒரு பெண்ணின் பார்வையில் சிக்கிக்கொண்டு தவிக்கும் தவிப்பை இரண்டு விதங்களில் வெளிப்படுத்துகின்றார். வலைக்குள் கொசு வரக்கூடாது என்று தடுப்பதற்காக விரிப்பது கொசுவலை. வலைக்குள் மீன் விழவேண்டும்; வீழ்ந்த மீன் வெளியே தப்பிச் செல்லக்கூடாது என்பதற்காக விரிப்பது மீன்வலை ஒன்று புறக்கணிப்பு மற்றொன்று எதிர்ப்பார்ப்பு. இது முரணாகும். இந்த முரணின் வாயிலாக ஒரு காதலனின் காதலுணர்ச்சியைக் குறியீடாகக் குறிப்பிடுதலைக் காணமுடிகின்றது.

"உன் தராசுத் தட்டுகளைக்
கொஞ்சம் கண்திறந்து பார்
அங்கே
புறாவின் மாமிசத்தை
சிபிகள் உண்ண ஆரம்பித்து விட்டார்கள்" (பால்வீதி)

என்ற தொன்மைச் சான்றினை தற்கால நிகழ்வோடு குறிப்பிட்டு கவிஞர் குறியீடாக்கியுள்ளதைக் காணலாம்.

"உங்கள் பாரம் / உங்களைவிட
மதிப்புடையதாகட்டும்
திரி சுமக்கும் சுடரைப்போல்"

என்ற கவிதையில் திரிசுமக்கும் சுடரும் மனிதன் சுமக்கும் பாரத்தையும் குறியீடுகளால் ஒப்பிட்டு கவிஞர் வாழ்வின் சுமைகளை சுகமாக்குகின்றார்.

முடிவுரை:

அப்துல்ரகுமான் கவிதைகளில் நட்சத்திரம், நெற்றிக்கண், இமை, சிலுவை ஆகியவை குறியீடுகளாக மீண்டும் மீண்டும் வருகின்றன. கோடி சூரியர்களைப் பிழிந்து நட்சத்திரங்கள் செய்தேன் என்ற இடத்தில் செறிவு என்ற பொருளிலும் ஒரு சங்காரத்தால் இந்த பூமி பண்படுத்தப் பட்டபின் நட்சத்திரங்களைத் தூவுவோம் இங்கே என்ற இடத்தில் 'உயர்ந்தது' என்ற பொருளிலும் நட்சத்திர வேஷம் அணிந்த எழுத்துக்கள் என்ற இடத்தில் 'விளக்கம்' என்ற பொருளிலும், இளவேனில் இரவு 'பூ' என்ற பொருளிலும் மூச்சுக்கயிறறுந்த மணியின் நாவிலிருந்து நட்சத்திரங்கள் மௌனமாக உதிரும் என்ற இடத்தில் 'ஆன்மா' என்ற பொருளிலும் நட்சத்திரம் பால்வீதியில் குறியீடுகளாக மின்னுதலைக் காணமுடிகின்றது. சங்க இலக்கிய உத்திகளில் காணப்படும் அழகியல் மற்றும் பொருண்மைத் தன்மையை அறிந்து கொள்ளுதல் போன்று புதுக்கவிதைகளில் காணப்படும் படிமம் மற்றும் குறியீடுகளில் அத்தகைய தன்மையைக் காணலாம். இதில் கவிக்கோ அப்துல் ரகுமான் முதன்மை பெறுதலை இக்கட்டுரையின் வழி அறிந்துகொள்ளமுடிகின்றது.

*****

கட்டுரையாளர்
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
ஏ. வி. சி. கல்லூரி(தன்னாட்சி)
மன்னன்பந்தல், மயிலாடுதுறை.

'கவிக்கோ' அப்துல் ரகுமான் புதுக்கவிதை மற்றும் ஹைக்கூ வடிவில் சிறந்து விளங்கியவர். அவரது கவிதைகள் எளிய மொழியில் ஆழமான தத்துவங்களையும், சமூக விமர்சனங்களையும், உணர்வுகளையும் வெளிப்படுத்தின. குறிப்பாக ஹைக்கூவில் சப்தமில்லாத ஆழத்தை அவர் வலியுறுத்தினார். அவரது கவிதைகள் பெரும்பாலும்,

- **ஆழமான தத்துவங்கள்:** வாழ்வின் எதார்த்தங்களை எளிமையாக விளக்குபவை.
- **சமூக விமர்சனம்:** நையாண்டி மற்றும் நயத்துடன் கூடிய விமர்சனம்.

- **ஹைக்கூ பாணி:** 3 வரிகளில் பிரம்மாண்டமான அர்த்தம்.

அப்துல் ரகுமானின் கவிதை எடுத்துக்காட்டுகள்:

- **படைப்பு/தத்துவம்:** "கொடுப்பவனுக்குத் தெரியாது; தான் கொடுக்கும் கை அல்ல, கருவி என்று!".
- **ஹைக்கூ/சிறிய கவிதை:**
  - "பனி நிறைந்த கண்ணாடியில்
    கண்கள் வரைந்தேன்
    கண்ணீர் வழிகிறது".
  - "நம்மைப் போலவே
    நடித்துக் காட்டுகிறது
    நிழல்".
- **சமூகக் கவிதை:** "உன் வீடு - உனது பக்கத்தின் வீட்டின் இடையில் வைத்த சுவரை இடித்து வீதிகள்!".

அப்துல் ரகுமான் ஹைக்கூ கவிதைகளில் ஜப்பானிய மரபுகளைக் கடுமையாகப் பின்பற்றத் தேவையில்லை, ஆனால் அதன் ஆழம் முக்கியம் என்ற கருத்தைக் கொண்டிருந்தார். [

தமிழில் புகுத்திய புதுமைகள்

https://www.tamilvu.org/courses/degree/p103/p1032/html/p1032514.htm

தமிழ்க் கவிதை இலக்கியத்தில் அப்துல் ரகுமான் பல புதுமைகளை அறிமுகப்படுத்திய முன்னோடி ஆவார். இதனால் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு தனிச் சிறப்பிடத்தை அவர் பெறுகிறார்.

- **மீமெய்ம்மை இயல்**

சர்ரியலிசம் என்னும் இந்தப் படைப்பாக்க முறையைக் கையாண்டு தமிழில் கவிதை நூல் (பால்வீதி) செய்தவர் இவர்.

- **நஜம், கீத், கஸல்**

இவை அரபி, உருது இசைப்பா வடிவங்கள் ஆகும். இவற்றைத், தமிழில் முதன்முதலில் எழுதி அறிமுகம் செய்துள்ளார். **மின்மினிகளால் ஒரு கடிதம்** தமிழ் கஸல்களின் முழுத்தொகுதி.

நான் உன் மூச்சு
என்னை நீ விட்டாலும்
மீண்டும்
வாங்கித்தான் ஆகவேண்டும் *(ப.18)*

என் இதயத்தை
உடைத்து விட்டாயே
இனி எங்கே வசிப்பாய்? (ப.19)

போன்ற அழகிய கஸல்கள் கொண்டது இந்த நூல்.

- **ஹைக்கூ**

இப்போது தமிழில் பலரும் எழுதிவரும் **ஹைக்கூ** என்னும் ஜப்பானியக் குறுங்கவிதை வடிவத்தை முதலில் தமிழில் அறிமுகம் செய்தவரும் இவர்தான். **சிந்தர்** என்ற தலைப்பில் **பால்வீதி**யில் ஐந்து ஹைக்கூக்கள் உள்ளன. அவற்றில் ஒன்று-

இரவெல்லாம்
உன் நினைவுகள்
கொசுக்கள்

காதல் நினைவுகள் உறங்க விடாமல் தொல்லை செய்கின்றனவாம்.

இவ்வாறு, அப்துல் ரகுமான் தமிழ் இலக்கிய உலகுக்குப் புதுமைகள் பலவற்றை அறிமுகம் செய்துள்ளார் என்று அறியலாம்.

அப்துல் ரகுமான் மிகச் செறிவான, எண்ணிக்கையில் மிகுதியான பல சிறந்த கவிதைகளைப் படைத்துள்ள பெருங்கவிஞர். இதனால் தான் **கவிக்கோ** என்று சிறப்பிக்கப்படுகிறார். (**கோ** = அரசர்)

இவரது படைப்புகளில் நாம் இப்பாடத்தில் அறிந்து கொண்டவை மிகமிகச் சிறிய அளவே ஆகும். இவரது நூல்களைத் தேடிப் படித்துக் கவிதைச் சுவைப்புத் திறனையும் படைப்புத் திறனையும் வளர்த்துக் கொள்ளுங்கள்.

நண்பர்களே, உங்கள் கவிதை நுகர்வுத் திறனைச் செழிப்பாக்கவும், நீங்களாகவே கவிதை வாசிப்புப் பயிற்சி பெற்றுக் கொள்ளவும், அப்துல் ரகுமானின் **ஆலாபனை** நூலில் இருந்து **நீராக** என்ற கவிதையின் சில அடிகள் கீழே தரப்படுகின்றன.

நீராக

நீரிலிருந்து பிறந்தவனே
நீ ஏன் நீராக இல்லை?
நீ மட்டும்
நீராக இருந்தால்
இல்லாமல் போகமாட்டாய்
நீ மட்டும்
நீராகவே இருந்தால்

உன்னை யாரும்
காயப்படுத்தவே முடியாது

நீரைப்போல்
மென்மையாக இரு
மென்மையே
உயிர்த் தன்மை
நீரைப் போல்
போராடுகிறவனாக இரு

நீர் ஆயுதமில்லாமல்
போராடுகிறது
ஆனால்
எல்லாவற்றையும்
வென்று விடுகிறது

நீரைப்போல்
உன் சிறைகளில் இருந்து
கசிகின்றவனாக இரு

நீரைப்போல்
கண்டுபிடிப்பவர்களுக்காக
ஒளிந்திரு

நீரைப்போல்
சுவை அற்றவனாக இரு
எப்போதும்,
நீ தெவிட்டாதவனாக
இருப்பாய்

நீரைப்போல்
பிரதிபலிப்பவனாக இரு
சூரியனும் சந்திரனும்
உனக்குக் கிடைப்பார்கள்

நீரைப்போல்
எங்கே சுற்றி அலைந்தாலும்
உன் மூல சமுத்திரத்தை
அடைவதையே
குறிக்கோளாய்க் கொள்வாயாக !

இக்கவிதை மிக எளிதானதாக எழுதப்பட்டுள்ளது. ஆயினும் நுண்மையான பொருள்நலம் கொண்டது. பிறர் உதவியின்றி நீங்களாகவே படித்து, சிந்தித்து, உணர்ந்து கொள்ள முயலுங்கள்.

அப்துல் ரகுமான்

கவிதைகள் / கட்டுரைகள்

https://nathiyalai.wordpress.com/2006/11/04/%E0%AE%85%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%81%E0%AE%B2%E0%AF%8D-%E0%AE%B0%E0%AE%95%E0%AF%81%E0%AE%AE%E0%AE%BE%E0%AE%A9%E0%AF%8D-%E0%AE%95%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%A4%E0%AF%88%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D/

கவிதை தொகுப்புகள் :

1. பித்தன்
2. நேயர் விருப்பம்
3. பால் வீதி
4. சுட்டு விரல்
5. ஆலாபனை (சாகித்ய அகாடெமி விருது பெற்றது)
6. மின்மினிகளால் ஒரு கடிதம்
7. விதை போல் விழுந்தவன் (அண்ணா கவியரங்கக் கவிதைகள்)
8. முத்தமிழின் முகவரி (கலைஞர் கவியரங்கக் கவிதைகள்)
9. சொந்தச் சிறைகள் (வசன கவிதை)
10. மரணம் முற்றுப் புள்ளி அல்ல

கட்டுரை தொகுப்புகள் :

1. மகரந்தச் சிறகு
2. அவளுக்கு நிலா என்று பெயர் (ஜூனியர் விகடன் கட்டுரைகள்)
3. முட்டை வாசிகள் (ஜூனியர் விகடன் கட்டுரைகள்)
4. தொலைபேசிக் கண்ணீர் (ஜூனியர் விகடன் கட்டுரைகள்)
5. பூப்படைந்த சப்தம் (ஜூனியர் விகடன் கட்டுரைகள்)
6. கம்பனின் அரசியல் கோட்பாடு
7. காற்று என் மனைவி (ஜூனியர் விகடன் கட்டுரைகள்)
8. உறங்கும் அழகி (ஜூனியர் விகடன் கட்டுரைகள்)
9. நெருப்பை அணைக்கும் நெருப்பு

10. பசி எந்தச் சாதி (ஜூனியர் விகடன் கட்டுரைகள்)
11. நிலவிலிருந்து வந்தவன் (குமுதம் ரிப்போர்ட்டர் கட்டுரைகள்)
12. கடவுளின் முகவரி (குமுதம் ரிப்போர்ட்டர் கட்டுரைகள்)
13. முத்தங்கள் ஓய்வதில்லை (குமுதம் ரிப்போர்ட்டர் கட்டுரைகள்)

கவிக்கோ அப்துல் ரகுமான்

உதிர்ந்த மௌனம்

https://cinema.vikatan.com/kollywood/91141-abdul-rahman-special-article

தமிழின் தனிப்பெரும் அடையாளமாக விளங்கிய கவிக்கோ அப்துல் ரகுமானை காலம் பறித்துக் கொண்டுவிட்டது. தனக்கென இயல்பானதொரு மொழிக்கட்டை கட்டமைத்துக்கொண்டு, தனது வெளியில் சமரசமில்லாமல், எவ்வித விசாரணைகளுக்கும் தலை வணங்காமல் ஆகப்பெரும் படைப்புகளை எழுதிக் குவித்த அந்த மகா கவிஞன், 2.6.2017 அதிகாலை 2 மணி அளவில் இயற்கையில் கலந்து விட்டார்.

எல்லாக் கலை வடிவங்களும் மக்களுக்கானதே' என்ற கொள்கையில் தீவிரம் கொண்டிருந்த கவிக்கோ, தமிழ்க் கவிதை வடிவத்தை வளப்படுத்திய 'வானம்பாடி' இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவர். தமிழுக்கு அரிய பல இலக்கிய வடிவங்களை அறிமுகம் செய்தவர். வெறும் படைப்பாளியாக மட்டுமில்லாமல், அரசியலிலும், சமூக பிரச்னைகளிலும் தம் கவிதையோடு களத்தில் நின்றவர். 1937, நவம்பர் 9ம் தேதி மதுரையில், வைகை ஆற்றின் தென்கரையிலுள்ள கீழ்ச்சந்தைப்பேட்டையில் பிறந்தவர் அப்துல் ரகுமான். தந்தை சையத் அஹமத், புகழ்பெற்ற உருதுக் கவிஞர். மஹி என்ற பெயரில் பல படைப்புகளை வழங்கியவர். அம்மா பெயர் ஜைனத் பேகம்.

சிறு வயதிலேயே வாசிப்புப் பழக்கம் ஒட்டிக்கொள்ள தமிழார்வமும், திராவிட இயக்க ஈடுபாடும் அப்துல் ரகுமானை எழுத்து நோக்கி நகர்த்தியது. ஒன்பது வயதில்

"எழிலன்னை ஆட்சியடா! -அது
எங்கெங்கும் காணுதடா!
பொழிலெங்கும் பாடுகிறாள் -புதுப்

பூக்களில் புன்னகைத்தாள்
மாலை மதியத்திலும் -அந்தி
மந்தார வானத்திலும்
சோலையின் தென்றலிலும் -சுக
சோபனம் கூறுகிறாள்
மலைகளின் மோனத்திலே- அந்த
வானவில் வண்ணத்திலே
அலைகளின் பாடலிலே -அவள்
அருள் பொங்கி வழியுதடா! "

என்ற தனது முதல் கவிதையை எழுதினார் அப்துல் ரகுமான்.

மதுரை தியாகராசர் கல்லூரியில் முனைவர் மா. இராசமாணிக்கனார், ஔவை துரைசாமி, அ. கி.பரந்தாமனார், அ. மு. பரமசிவானந்தம் போன்ற பெரும் ஆளுமைகளிடம் பயின்ற அனுபவம் அவரின் சிந்தனையையும் எழுத்தையும் செம்மைப்படுத்தியது. புதுக்கவிதையின் நுட்பங்களில் ஒன்றான குறியீடுகள் பற்றி ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றார்.

இன்டர்மீடியட் படித்துக்கொண்டிருந்தபோது, 'காதல் கொண்டேன்' என்ற தலைப்பில் அப்துல்ரகுமான் ஒரு கவிதை எழுதினார். அக்கவிதை ஆனந்த விகடன் இதழில் வெளிவந்தது. அவர் எழுதி அச்சாக்கம் பெற்ற முதல் கவிதை அதுதான். ஆங்கிலம், அரபி, உருது, பாரசீகம், இந்தி, சமஸ்கிருதம் உள்ளிட்ட மொழிகளிலும் புலமை பெற்றிருந்த அப்துல் ரகுமான், படிப்பு முடிந்ததும் தியாகராசர் கல்லூரி நிறுவனர் கருமுத்து தியாகராசர் நடத்திய 'தமிழ்நாடு' நாளிதழில் பிழை திருத்துனராக பணியில் சேர்ந்தார். பிறகு, வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியில் இணைந்தார். 1961-ல் சிற்றுரையாளராக பணியில் சேர்ந்த கவிக்கோ, படிப்படியாக உயர்ந்து, சுமார் 20 ஆண்டு காலம் தமிழ்த்துறை தலைவராக செயலாற்றினார்.

1964-ல் கவிக்கோவின் முதல் கவிதைத்தொகுப்பு 'பால்வீதி' வெளியானது. பல இளம் படைப்பாளிகளுக்கு இந்தத் தொகுப்பு பெரும் ஆதர்சமாக இருந்தது. இன்றளவும் இருக்கிறது. 'சர்ரியலிசம்' என்ற 'மீமெய்மையியல்' பாணியைத் தமிழுக்குக் கற்றுத்தந்த தொகுப்பாக அதைக் கருதலாம்.

கவியரங்கக் கவிதை வாசிப்பை ஒரு நிகழ்த்துக் கலையாக உருமாற்றியவர் கவிக்கோதான். 'நேயர் விருப்பம்', 'ஆலாபனை', 'பித்தன்', 'பாலைநிலா', 'கண்ணீர் துளிகளுக்கு முகவரி இல்லை'

உள்ளிட்ட கவிதைத் தொகுப்புகள் கவிக்கோவின் பேராளுமைக்குச் சான்று. அரபி மொழியில் தோன்றி, பாரசீகத்திலும் உருதுவிலும் மலர்ந்து மணம் வீசும் கஜல் இலக்கியத்தைத் தமிழுக்கு அறிமுகம் செய்தது அப்துல் ரகுமான்தான். 'மின்மினிகளால் ஒரு கடிதம்' என்ற பெயரில் கஜல் கவிதைத் தொகுப்பு ஒன்றையும் வெளியிட்டுள்ளார். ஹைக்கூ கவிதைகளைத் தமிழுக்கு அறிமுகம் செய்ததும் கவிக்கோதான்.

'பூப்படைந்த சப்தம்', 'தொலைப்பேசிக் கண்ணீர்', 'காற்று என் மனைவி', 'உறங்கும் அழகி', 'நெருப்பை அணைக்கும் நெருப்பு' உள்பட 17-க்கும் மேற்பட்ட கட்டுரை நூல்களும் வெளிவந்துள்ளன. கவியரங்கக் கவிதைகளும் தொகுப்புகளாக வெளிவந்துள்ளன. 'ஆலாபனை' என்ற கவிதைத் தொகுப்புக்கு சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டது.

அப்துல்ரகுமான் ஜூனியர் விகடனில் எழுதிய 'சொந்தச் சிறைகள்', 'மரணம் முற்றுப்புள்ளி அல்ல', 'முட்டைவாசிகள்', 'அவளுக்கு நிலா என்று பெயர்', 'கரைகளே நதியாவதில்லை' போன்ற தொடர்கள் வாசகர்களின் பெரும் வரவேற்பைப் பெற்றவை. கவிதை, கட்டுரைகளில் இயங்கிய அளவுக்கு கவிக்கோ நாவல், சிறுகதைகளில் இயங்கவில்லை. இதுகுறித்து கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு, "கவிதையே கரைகாணமுடியாத கடல். அதில் மூழ்கி எடுக்க வேண்டிய முத்துக்களோ ஏராளம். எனவே நான் கவிதைகளில் முழுக்கவனம் செலுத்த விரும்புகிறேன். சிறுகதைகளையும் நாவல்களையும் நான் வெறுக்கவில்லை. ஆனால் மூன்றையும் எழுதுவது மூன்று மனைவிகளைக் கட்டிக்கொள்கிறவனின் நிலைமை ஆகிவிடும். அதனால்தான் சிறுகதையையும் நாவலையும் எழுதுவதைத் தவிர்க்கிறேன்.." என்று பதில் அளித்தார்.

அப்துல் ரகுமான் எழுதிய நான்கு சிறுகதைகள் ஆனந்த விகடனில் வெளிவந்திருக்கின்றன. 'ராட்சஸம்' என்ற சிறுகதை 14.3.1993 ஆனந்த விகடன் இதழில் வெளிவந்தது. அந்தச் சிறுகதை....

ராட்சஸம்

தலைவர் 'பார்ட்' பார்ட்'டாய் வந்து இறங்கினார். தலையிலிருந்து மார்பு வரை, மார்பிலிருந்து இடுப்பு வரை, இடுப்பிலிருந்து முழங்கால் வரை, முழங்காலிலிருந்து பாதம் வரை என்று நான்கு பெரிய வர்ணத் துண்டுகள்.

சாரம் முன்பே கட்டப்பட்டுவிட்டது. துண்டுகளை ஒட்டுப் போட்டுத் தூக்கி நிறுத்த வேண்டியதுதான் பாக்கி.

பெருமாளின் தலைமையில் ஆட்கள் பம்பரமாய்ச் சுழன்று கொண்டிருந்தனர். நாளை காலையில் கூட்டம். விடிவதற்குள் முடித்தாக வேண்டும். அந்தப் பரபரப்பில் ஏற்பட்ட பதற்றமும் எரிச்சலும் அவருடைய ஏவல்களில் தெரிந்தன.

பையன் டீ கொண்டுவந்து கொடுத்தான். வேலையிலிருந்து கண்களைப் பெயர்க்காமலே பெருமாள் டீயை வாங்கிக் குடித்தார். பெருமாள் பழைய தலைமுறையைச் சேர்ந்தவர். பெரிய பெரிய தலைவர்களையெல்லாம் அவர் பார்த்திருக்கிறார். அவர்களுக்கெல்லாம் இப்படி ராட்சஸக் கட்-அவுட்டுகள் தேவைப்படவில்லை. அவர்கள் சுயமான விஸ்வரூபத்தில் உயர்ந்து, மக்கள் மனத்தில் பிரமாண்டமாக நின்றார்கள். அவர்களுடைய உயரம் தூரிகையாலும் மரத்தாலும் ஆனதல்ல; அவர்களைத் தூக்கி நிறுத்தச் சாரமும் தேவைப்பட்டதில்லை.

"ஐயா..." என்ற குரலில் அவர் சிந்தனை கலைந்தது. எதிரில் ஓர் இளைஞன்.
"நானும் கூடமாட ஒத்தாசை செய்யட்டுமா?"
"வேண்டாம் தம்பி... போதுமான ஆட்கள் இருக்காங்க..."
"கூலி ஒண்ணும் வேணாங்க, சும்மா செய்றேன். தலைவருன்னா எனக்கு உசுரு. அவருக்குக் கட்-அவுட் வெக்கறதிலே நானும் சேந்துக்கணும்னு ஆசையா இருக்கு..."
"ஓம் பேரு என்ன?" - பெருமாளின் கேள்வியில் கொஞ்சம் வியப்பும் கலந்திருந்தது.
"கபாலிங்க..."
"சரி.. போய்ச் செய்..."

கபாலி உற்சாகமாக ஓடினான். சாரத்தில் கால்பகுதி கட்டப்பட்டு முடிந்திருந்தது. அவன் அந்தக் கால்களில் விழுந்து வணங்கினான். எழுந்து பக்கத்தில் தரையில் கிடந்த தலைவரின் முகத்தை ஆசையோடு தடவினான். வலை வீசும் இந்தப் புன்னகை யாருக்கு வரும்..? அவனுக்குள் சுரந்த பயபக்தி முகத்தில் கசிந்தது.

கபாலி கட்சிக்காரன் அல்ல. உண்மையான அர்த்தத்தில் அரசியலும் அவனுக்குத் தெரியாது. காட்டப்படுவதை நம்பும் இனம் அவன். தலைவர் கிழவியின் தலையைத் தடவுவது, ஊனமுற்ற சிறுவனுக்குச்

சக்கர வண்டி கொடுத்து அவனுக்கு முத்தமிடுவது, தீ விபத்தில் வீடு இழந்தவர்களுக்கு உணவுப்பொட்டலம், வேட்டி, சேலை கொடுப்பது... இதையெல்லாம் படங்களில் பார்த்து, ஏழைகளுக்காக உருகி உருகிப் பேசுவது, அவர்கள் உரிமைகளுக்காக வீராவேசமாக முழங்குவது... இதையெல்லாம் கேட்டு, அவனுடைய இதயத்தில் ஒரு சிம்மாசனம் போட்டு அவரை உட்கார வைத்திருந்தான். செய்தித்தாள்களில் காட்டப்படும் வெளிப்பக்கத்தை மட்டுமே தரிசிக்கிறவன் அவன். தூண்டில் முள்ளை மறைக்கும் புழுவை அடையாளம் காணும் பக்குவமெல்லாம் அவனுக்கு இல்லை.

தலைவர் எங்கே பேசினாலும் அங்கே போய்விடுவான். 'என் கண்ணின் மணிகளே!' என்று அவர் தொடங்கும்போது பரவசமாகி, மெய்சிலிர்த்து, விசிலடித்து ஆரவாரித்துக் கைதட்டுவான். தேர்தல் காலத்தில் அவருக்காகப் பசி, தாகம் பார்க்காமல் வேலை செய்வான். போஸ்டர் ஒட்டுவான்; சுவரில் எழுதுவான்; ஊர்வலம் போவான்; உரக்கக் கோஷம் போடுவான்; அவரை யாராவது குறைத்துப் பேசினால், சண்டைக்குப் போய்விடுவான். இதில் எத்தனையோ முறை அடி உதை பட்டு ரத்தம் சிந்தியிருக்கிறான். இதையெல்லாம் தலைவருக்குக் காணிக்கையாகவே நினைத்துக்கொள்வான். தேர்தலில் தலைவர் ஜெயித்துவிட்டால், தானே ஜெயித்ததுபோல் பட்டாசு கொளுத்திக் கூத்தாடுவான். அந்த ராமனுக்குதான் ஓர் அணில் என்று அவனுக்கு நினைப்பு. ஆனால், அவன் முதுகு எப்போதும், யாராலும் தடவிக் கொடுக்கப்பட்டதில்லை. அதை அவன் எதிர்பார்த்ததும் இல்லை.

ஆட்கள், இடுப்புப் பகுதியைத் தூக்க வந்தார்கள். கபாலியும் அவர்களோடு சேர்ந்து கைகொடுத்தான். அந்தக் கனம் அவனுக்குச் சுமையாகப் படவில்லை. தலைவரைத் தூக்குகிறோம் என்ற பெருமையும் மகிழ்ச்சியும் அவன் முகத்தில் பளிச்சிட்டன.

நேரம் ஆக ஆக, பெருமாளுக்குப் பதற்றம் அதிகரித்தது. கொஞ்ச நேரத்துக்கு முன்னால்தான் அமைச்சர் ஒருவர் வந்து, வேகம் போதாதென்று கெட்ட வார்த்தையில் திட்டிவிட்டுப் போனார். அவர் பரபரப்பாக ஆட்களை வேகப்படுத்தினார். அது கட்சிக் கூட்டம்தான். ஆனாலும் மேடை பந்தல் வேலைகளில் அரசாங்க அதிகாரிகள் பயபக்தியோடு ஈடுபட்டிருந்தனர். அரசாங்க வாகனங்கள் இங்கும் அங்கும் புழுதி பறக்க ஓடிக்கொண்டிருந்தன.

“இவங்களுக்கெல்லாம் பெரிசாக் காட்டணும். அதுவும் அவசரமா காட்ட ணும். ஜனநாயகம்கிறானுங்க... அமைச்சர்கள் ஜனங்களுடைய சேவகர்கள் என்கிறானுங்க... ஆனா, ஜனங்களைவிட, தான் ஒசத்தி... ஜனங்க தங்களை அண்ணாந்து பாக்கணும்.. தங்களை அற்பமா நெனச்சு கால்லே விழுந்து வணங்கணும்... கப்பம் கட்டணும்னு நெனக்கிறானுங்க... தெரியாத தேவதையைவிட தெரிந்த அரக்கன் மேல்ங்கற ஜனங்க மனப்பான்மையை இவங்க நல்லா தெரிஞ்சு வெச்சிருக்கானுங்க. அதனாலே தங்களுடைய உருவத்தை, முகத்தை செயற்கையா அசிங்கமா பெரிசாக்கி, பாமரர் மனசிலே பலவந்தமா திணிக்க முயற்சி பண்றாங்க. உருவத்தைப் பெரிசா காட்டுனா பெரிய மனுஷன் ஆயிட முடியுமா? இது படங்களை நம்புற தேசம். அதனாலே எல்லாரும் படங்காட்ட றானுங்க.. தூத்தேறி...” - பெருமாள் காறித் துப்பினார்.

தலைப்பகுதியைப் பொருத்திவிட்டு ஆட்கள் இறங்கிக்கொண்டிருந்தார்கள். கபாலிக்கு உடையெல்லாம் அழுக்காகி விட்டது. உடம்பில் அங்கங்கே சிராய்ப்பு. ஆனால், அவனுக்குக் களைப்போ, வலியோ தெரியவில்லை. அவன் தூரத்தில் போய் நின்று பார்த்தான். தலைவர் வானளாவ உயர்ந்து அட்டகாசமாக, கம்பீரமாக நின்றுகொண்டிருந்தார். பின்னால் இருந்த கோயில் கோபுரம்கூடத் தெரியவில்லை. அதைவிட உயரமாக அதை மறைத்துக்கொண்டு நின்றிருந்தார் தலைவர். அந்தப் புன்னகை... யாருக்கு வரும் அந்தப் புன்னகை? கபாலியின் உடம்பெல்லாம் பரவசம் பரவியது. அவன் கையெடுத்துக் கும்பிட்டான்.

“எவ்வளவு செலவாகியிருக்கும்?” - யாரோ ஒருவன் கேட்டான்.
“ஐம்பதாயிரம் ரூபாய்னு சொன்னாங்க...”
“ஐம்பதாயிரமா? அடப்பாவிங்களா... ஐம்பது குடும்பம் ஒரு மாசத்துக்குப் பசியில்லாம சாப்பிடலாமே... ராட்சஸன் மாதிரி அவ்வளவையும் விழுங்கிக்கிட்டு நிக்கிறதைப் பாரு...”

கபாலிக்கு இதயத்தில் ‘சுரீர்’ என்றது. கோபத்தோடு திரும்பிப் பார்த்தான். கட்டையும் குட்டையுமாக இருந்தவன்தான் அப்படிப் பேசிக்கொண்டிருந்தான்.

கபாலி அவன்மேல் பாய்ந்தான். “எங்க தலைவரு தெய்வம்யா... அவரைப் போய் ராட்சஸன்னா சொல்றே?” என்று கத்தியபடி அவன் முகத்தில் குத்தினான்.

எதிர்பாராத தாக்குதலில் முதலில் நிலைகுலைந்து திகைத்துப்போன அந்த ஆள், தன்னைச் சமாளித்துக்கொண்டு கபாலியை ஓங்கி எட்டி மிதித்தான். கபாலி குலைந்துபோய்க் கீழே விழுந்தான்.

“இவனாடா தெய்வம்? ஏண்டா தெய்வம்ங்கற வார்த்தையை இப்படி அசிங்கப் படுத்துறீங்க... உன்ன மாதிரி முட்டாப் பசங்களுக்குத்தான்டா இவன் தெய்வம்... உடுத்த மறு வேட்டி இல்லாம இந்த ஊருக்கு வந்தவன்டா ஒங்க தலைவன். இப்போ இந்த ஊர்லே பாதி அவனுக்குச் சொந்தம்... எங்கேயிருந்துடா வந்தது இவ்வளவு பணம்? குடியை ஒழிக்காம சாகமாட்டேன்னு கூவுறானே ஒங்க தலைவன்... பினாமியிலே ரெண்டு சாராயத் தொழிற்சாலை இருக்குடா அவனுக்கு... உனக்குத் தெரியுமா? சேரியை எல்லாம் ஒழிக்காம தூங்கமாட்டேன்னு மேடையெல்லாம் முழங்குறானே... அவன் எப்படி எங்க சேரியை ஒழிச்சான் தெரியுமா? தனக்குப் பெட்டி பெட்டியா கொண்டுவந்து கப்பம் கட்டறவன் ஓட்டல் கட்டறதுக்காக, ஒரு சேரியையே நெருப்பு வெச்சுக் கொளுத்த வெச்சவன்டா ஒங்க தலைவன்... அந்தத் தீயிலே வீடு, வாசல், குழந்தையைப் பறிகொடுத்தவன்டா நான்...” - அந்த ஆள் பொங்கி வெடித்துச் சிதறிக் கொண்டிருந்தான்.

கைகலப்பைப் பார்த்துப் பதறிக் கொண்டு ஓடிவந்தார் பெருமாள். வம்பு எதுவும் வந்துவிடக் கூடாதே என்று, அந்த ஆளைச் சமாதானம் பண்ணி காலில் விழாத குறையாகக் கெஞ்சி அவனை அனுப்பிவைத்தார். பிழைப்புக்குக் கேடு வரும் என்றால் எதனோடும் சமரசம் செய்துகொள்ளப் பழகிவிட்டவர் அவர். கபாலியையும் சமாதானப்படுத்திவிட்டு அவர் போய்விட்டார்.

கபாலிக்கு இதயத்தில் வலித்தது. ‘இல்லை... இல்லை... இதெல்லாம் உண்மையா இருக்க முடியாது... இருக்கக் கூடாது. அவன் எதிர்க்கட்சிக்காரனா இருப்பான்... பொய் சொல்றான்... தலைவர் இப்படியெல்லாம் செய்யமாட்டார்...’ -ஆனால், அவன் இதயத்திலிருந்த சிம்மாசனம் லேசாக ஆடத் தொடங்கியது.

கட்-அவுட்டை அவன் நிமிர்ந்து பார்த்தான். ‘தலைவரே, இது உண்மையா? உண்மையா?’ என்று அவன் இதயம் அலறியது. காற்று ‘ஹோ.. ஹோ..’ என்று இரையத் தொடங்கியது. மரங்கள் பேயாடின. தலைவரின் அந்தப் புன்னகை மெதுவாக மறைந்தது. வாயின் இரண்டு பக்கத்திலும் கோரப் பற்கள் முளைத்தன. முகம் விகாரமானது.

கபாலி எழுந்து ஓடினான். "இல்லை.. இது உண்மை இல்லை" என்று கட்-அவுட்டின் கால்களைப் பிடித்துக் கொண்டு கதறினான். ஆணைக்குக் காத்திருந்ததுபோல், காற்று சீறிச் சினந்து ஆவேசமாகக் கட்-அவுட்டை அசைத்தது. கொஞ்ச நேரத்தில் கட்-அவுட் மடமடவென்று இரைச்சலுடன் சரிந்து விழுந்தது.

கட்-அவுட்டின் இடிபாடுகளை அகற்ற வந்தவர்கள், அதன் அடியில் ஒரு பிணத்தைக் கண்டு திடுக்கிட்டார்கள். பிணம் ரகசியமாக அப்புறப்படுத்தப்பட்டது. அந்த இடத்தில் சாட்சியாகக் கொஞ்சம் ரத்தக் கறை மட்டும் இருந்தது - 'இது உண்மையா...? உண்மையா?' என்ற மௌனமான அலறலோடு. காலையில் கூடும் கும்பலின் காலடிகள் பட்டு அதுவும் மறைந்துவிடும்.


கவிக்கோ அப்துல் ரகுமான் எழுதிய **'ஆலாபனை'** வசன கவிதைத் தொகுப்பிற்கு, **1999**-ஆம் ஆண்டு தமிழ்மொழிக்கான சாகித்ய அகாதமி விருது வழங்கப்பட்டது. 1995-இல் வெளியான இந்நூல், கவிதை நூல் பிரிவில் சாகித்ய அகாதமி விருது பெற்ற முக்கிய படைப்பாகக் கருதப்படுகிறது.

முக்கியத் தகவல்கள்:

- **ஆசிரியர்:** கவிக்கோ அப்துல் ரகுமான்.
- **விருது பெற்ற ஆண்டு:** 1999.
- **நூல் வகை:** வசன கவிதை (கவிதைத் தொகுப்பு).
- **சிறப்பு:** கவிதை நூலுக்கு முதன் முதலாக சாகித்ய அகாதமி விருது இந்த நூல் மூலம் வழங்கப்பட்டது.
- **ஓவியர்:** மணியம் செல்வன் (ஓவியங்கள் வரைந்துள்ளார்)

ஆலாபனை (நூல்)

https://ta.wikipedia.org/wiki/%E0%AE%86%E0%AE%B2%E0%AE%BE%E0%AE%AA%E0%AE%A9%E0%AF%88_(%E0%AE%A8%E0%AF%82%E0%AE%B2%E0%AF%8D)



ஆலாபனை

நூல் பெயர்:	ஆலாபனை
ஆசிரியர்(கள்):	அப்துல் ரகுமான்
வகை:	வசன கவிதைத் தொகுப்பு
துறை:	தமிழிலக்கியம்
காலம்:	20ஆம் நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டுகள்
இடம்:	சென்னை
மொழி:	தமிழ்
பக்கங்கள்:	160
பதிப்பகர்:	கவிக்கோ பதிப்பகம் 20 முதல் கடல்வழிச் சாலை வால்மீகி நகர் சென்னை
பதிப்பு:	முதல் பதிப்பு: பிப்ரவரி,1995 இரண்டாம் பதிப்பு: மூன்றாம் பதிப்பு: அக்டோபர், 2000
ஆக்க அனுமதி:	வகிதா
பிற குறிப்புகள்:	1999 ஆம் ஆண்டில் தமிழ்மொழிக்கான சாகித்ய அகாதமி விருது பெற்ற நூல்

ஆலாபனை (Aalabanai) என்னும் நூல் கவிஞர் அப்துல் ரகுமானால் [1] பாக்யா இதழில் எழுதப்பட்ட 42 வசன கவிதைகளின் தொகுப்பு ஆகும். 1995 ஆம் ஆண்டில் வெளிவந்த இந்த நூலிற்கு 1999 ஆம்

ஆண்டில் தமிழ்மொழிக்கான சாகித்ய அகாதமி விருது வழங்கப்பட்டது.[2] கவிதை நூலுக்கு முதன் முதலாக சாகித்ய அகாதமி விருது வழங்கப்பட்டது இந்நூலுக்குத்தான் என்பது குறிப்பிடத்தக்கதாகும். [3]இந்நூலை அப்துல் ரகுமான் தன் தமிழ்ப் பேராசிரியரான ஔவை சு. துரைசாமியின் நினைவாக வெளியிட்டு இருக்கிறார். ஒவ்வொரு கவிதைக்கும் ஓவியர் மணியம் செல்வன் ஓவியங்கள் வரைந்திருக்கிறார். இந்நூலில் உள்ள கவிதைகளின் அறிமுகம் வருமாறு:

ஒப்புதல் வாக்குமூலம் கவிதைகள்

ஒப்புதல் வாக்குமூலம் என்ற கவிதையின் மூலம் ,பெண்கள் என்ற மனித இனத்தின் நிகரில்லா வித்தினை ஆண்கள் ஆகிய நாங்கள் (ஆசிரியர் தன்னையும் சேர்த்து)அவர்களுக்குத் தீங்கு மட்டுமே செய்கிறோம் ,அவர்களுக்கான வாழ்வை நாங்கள் கொடுக்கவில்லை ,அதற்கு மாறாக அந்த வாழ்வை நாங்கள் அழிக்கிறோம் என்று ,ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கிறார்.

விளக்குகள்
விளக்குகளின் சுடர்களைப் பற்றிய கவிதையீஇ

கனவு

கனவுகளால் வாழ்கிறவர்களை வாழ்த்துவோம்! கனவுகளில் வாழ்கிறவர்களுக்காக அனுதாபப்படுவோம் எனக் கூறும் கவிதை.

போட்டி
வானத்திற்கும் மனிதனுக்கும் நடக்கும் போட்டியைப் பற்றிய கவிதை

பௌர்ணமிப் பிறை

குழந்தைமையைப் பற்றிய கவிதை.

அலங்காரம்

கண்ணுக்கு அழகாக இருப்பவர்களைக் காலம் சிதைத்துவிடுகிறது; காதுக்கு அழகாக இருப்பவர்கள் மரணத்தையும் அலங்காரமாக்கிக் கொள்கிறார்கள் எனக்கூறும் கவிதை

தவறான எண்
தொலைபேசியில் தவறான எண்ணில் தன்னிடம் மாட்டிக்கொண்ட கடவுளை வினாக்களால் துளைக்கும் கவிதை.

பற்று வரவு
மனிதர்கள் மது வாழ்வின் தடயங்களை விட்டுவிட்டுச் செல்ல வேண்டும் என்னும் கவிதை

நான் யார்
நான் தனியாளா என்னும் அகத்தாய்வு செய்யும் கவிதை

இழந்தவர்கள்
வயிற்றில் விழுந்து கிடப்பவனே! மேலே இதயத்திற்கு ஏறு! அங்கே உனக்கான ராஜாங்கம் காத்திருக்கிறது எனக் கூறும் கவிதை.

இரவின் கண்ணீர்
இருண்மையைப் பற்றிய கவிதை

ஆறாத அறிவு
உயிரினங்களில் மனிதன் மட்டும்தான் ஆறாவது அறிவைப் பெற்றிருக்கிறான். அதற்காக அவன் பெருமைப்படுகிறான் எனக் கூறும் கவிதை.

மானுடத்தின் திருவிழா
எங்கே அழகும் சுதந்திரமும் உண்டோ அங்கேதான் மானுடம் திருவிழாக் கொண்டாடுகிறது எனக் கூறும் கவிதை

கோடுகள்
வரப்பிலும் முளைக்கிறது புல்; வேலியிலும் மலர்கிறது பூ; நம் கோடுகளில் மட்டும் காயங்கள் எனக் கூறும் கவிதை.

வெற்றி
தோல்வியே! நீதான் நாம் சம்பாதிக்கும் பணம் வெற்றியைக் கூட அதனால் வாங்க முடியும் எனக் கூறும் கவிதை.

சிறகுகள்
பறவையைப் போல தனக்குச் சிறகுகள் இல்லையே என ஏங்கும் மனிதனைப் பார்த்து, "பற! மேலே பற! உன்னைவிட மேலே பற!" எனக் கூறும் கவிதை.

ஒரு மேகத்தைப் போல்
மேகத்திற்கும் மனிதனுக்கும் நடக்கும் தத்துவ உரையாடல்

காந்தக் கயிறு

சகலமும் அதனால் வந்தவை; சகலமும் அதற்காக வந்தவை. அந்தத் தூண்டிலில்தான் இறைவனும் சிக்கிக்கொள்கிறான் எனக் காதலின் சக்தியைப் பற்றிப் பேசும் கவிதை.

அதுதான்
வாழ்க்கையைப் பற்றிய கவிதை

அந்த இடம்
ஒலியும் ஒளியும் மணமும் சங்கமித்துப் பேதமற்றிருக்கும் அந்த இடத்திற்கு என்னையும் அழைத்துச் செல் என வேண்டும் கவிதை.

மாதிரி
ஒருவர் யார் யார் மாதிரியாகவோ இருந்து தன்னுடைய அடையாளத்தை இழப்பதைப் பற்றிய கதை.

முரண்களின் போராட்டம்
ஒருவருக்குள் இருக்கும் இரண்டு முரண்பாடுகளின் போராட்டத்தைப் பற்றிய கவிதை.

பழம் புதிது
புதுமை நாட்டமே உன்னை வளர்ந்தது உன் காயங்களுக்கும் அதுதான் காரணம் எனக் கூறும் கவிதை இது.

குருடர்களின் யானை
குருடர்கள் சிலர் யானையைத் தடவிப் பார்த்து அதனைப் பற்றிப் புரிந்துகொண்டதைப் போல, மதத்தை மூடர்கள் புரிந்துகொள்கிறார்கள் என்னும் கவிதை.

வகைகள்

ஒன்றே பல ஆனதும் பல மீண்டும் ஒன்றில் ஒடுங்குவதும் அறி! எனக் கூறுக் கவிதை.

பாதை
பல்வேறு பாதைகள் இருக்கும் இவ்வுலகில் இதயத்திற்குப் போகும் பாதையை மட்டும் காணவில்லை; அதனால்தான் மனிதன் இன்னும் ஊர்ப்போய்ச் சேரவில்லை எனக் கூறும் கவிதை.

வேர்களும் கிளைகளும்

நீ சிறிய விதைதான்; ஆனால் உனக்குள் ஒளிந்திருக்கிறது பிரம்மாண்டமான மரம்! எனக் கூறும் கவிதை.

மனித புத்தி

பறவைகளின் சுதந்திரத்தை விலங்குகளின் கள்ளங்கபடற்ற தன்மையை மனிதன் கற்றுக்கொண்டிருக்கலாம் எனக் கூறும் கவிதை.

கொடுக்கல்

கொடு நீ சுத்தமாவாய்; கொடு நீ சுகப்படுவாய்; கொடு அது உன் இருத்தலை நியாயப்படுத்தும் எனக் கூறும் கவிதை.

கடற்கரை

வாழ்க்கை ஒரு மகா சமுத்திரம் எனக் கூறும் கவிதை.

மரணம் என்ற அழகு

மரணம் என்றால் அழிவு என்கிறாய்; அது நிறைவு என்பதை நீ கவனித்ததில்லையா? என வினவும் கவிதை.

முகமூடி

நம் முகமூடிகளே நம் மகுடங்கள்; அவை கழற்றப்பட்டுவிட்டால் யாரும் அவரவர் அரியாசனத்தில் அமர்ந்திருக்க முடியாது.

சாத்தானின் சந்நிதி

வாழ்க்கையை வழங்கும் காதலையும் காமத்தையும் மறுத்து மரணத்தை ஏன் தேர்ந்தெடுக்கிறீர்கள் என வினவும் கவிதை.

கண்ணீரின் ரகசியம்

கண்ணீர்தான் உன்னைக் காட்டுகிறது; புன்னகையோ சில நேரங்களில் உனக்குத் திரையாகிவிடுகிறது என விளக்கும் கவிதை.

தற்கொலை செய்

அகங்காரம் என்ற கிரீடத்தைச் சூட்டிக்கொள்கிறவனே! 'தற்' கொலை செய்துகொள்; நீ அமரனாவாய்! எனக் கூறும் கவிதை

சுயப்பிரசவம்

உன்னைப் பிரசவிப்பது உன் பெற்றோர்கள் அல்லர்; உன்னை நீயேதான் பிரசவிக்க வேண்டும் எனக் கூறும் கவிதை

பத்திரப்படுத்துங்கள்
நாளை ஒரு பூகம்பத்தில் நீங்கள் முழுவதும் அழிந்துபோகாமல் இருப்பதற்கு எவற்றை எல்லாம் பத்திரப்படுத்த வேண்டும் எனக் கூறும் கவிதை.

மறுபக்கம்

ஒரு பக்கத்தையே பார்த்துக்கொண்டிருப்பவனே திருப்பிப் பார்; மறுபக்கத்திலும் இருக்கிறது சத்தியத்தின் தரிசனம் எனக் கூறும் கவிதை.

நீராக ...
நீரைப்போல் எங்கே சுற்றி அலைந்தாலும் உன் மூல சமுத்திரத்தை அடைவதையே குறிக்கோளாய்க் கொள்வாயாக எனக் கூறும் கவிதை.

நாட்டுமிராண்டிகள்

காட்டுமிராண்டிகள் எனக் கூறப்படும் மனிதர்களிடம் இருக்கிற, ஆனால் நாகரிகம் அடைந்தவர்களாகக் கருதப்படுகிறவர்களிடம் இல்லாத நாகரிகங்களைப் பேசுகிற கவிதை.

அதிகாரம்

உங்களால் பூவாக முடிந்தால். வண்டுகளை வரவழைக்க நீங்கள் கட்டளை இட வேண்டியதில்லை என விளக்கும் கவிதை.

வீழ்ச்சி
பிறந்ததில் இருந்து எல்லாவற்றிலும் விழுந்து விழுந்து மரத்துப் போய்விட்டது நமக்கு எனக் குத்திக்காட்டும் கவிதை.

(😊)(😊) **அப்துல் இரஹ்மான்**(😊)(😊)